பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 05 | சனிக்கிழமை | 17.02.2024 | கதிர் 102

# 10 வயதுச் சிறுமி கடத்திக் கொலை

## மன்னாரில் அதிர்ச்சியூட்டும் சம்பவம் தோட்ட பராமரிப்பாளர் ஒருவர் கைது

மன்னார்- மாவட்டம், தலைமன்னார் கிராமத்தில் 10 வயதுச் சிறுமி ஒருவர் கடத்திக் கொல்லப்பட்டுள்ளார். வியாழக்கிழமை இரவு காணாமற்போன சிறுமி மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலை தென்னந்தோட்டம் ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். இந்தக் கொலை தொடர்பில் தோட்டத்தின் பராமரிப்பாளர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்ப நிலையில் கட்சியின் தலைவர் தேர்தலைக்கூட திரும்ப நடத்தவேண்டி வருமோ என்று தோன்றுகின்றது. கட்சியின் தேசிய மாநாட்டை நடத்தக்கூடாது என்று திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் இரு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் நேற்று யாழ்ப்பாணத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்களைப் பார்த்த போது அதற்கான சாத்தியங்கள் இருப்பதாகத்தான் தெரிகின்றது.

தமிழ் அரசுக் கட்சியின் யாப்புப்படி பொதுச் சபைக் கூட்டம் நடத்தப்படவில்லை என்று தெரிவித்து அதனால் தேசிய மாநாட்டைத் தடை செய்யவேண்டும் என்று ☞ 2

## ஜே.வி.பியின் வெற்றி வெறும் கற்பனாவாதம்

### நளின் பண்டார எம்.பி. கருத்து

அடுத்துவரும் தேர்தல்களில் ஜேவிபி வெல்லும் என்பது வெறும் கற்பனாவாதம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் குருநால் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞ 9

## பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டால் அரசியல் பிரச்சினை தானாகத் தீரும்

### அரசியல் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் இந்தியத் தூதவர் சந்தோஷ் ஜா நேற்று தெரிவிப்பு

பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டால் இலங்கையின் அரசியல் பிரச்சினைகள் தானாகவே தீரும் என்று இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா நேற்று யாழ்ப்பாணத்தில் அரசியல் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிகளைச் சந்தித்துப் பேசிய போது வலியுறுத்தியுள்ளார்.

''நாங்கள் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்தால் மற்றைய பிரச்சினைகளை தானாகவே தீர்த்துக்கொள்ளலாம் என்ற முறையிலே அவருடைய எண்ணங்கள் பேச்சுக்கள் இருந்ததை நான் அவதானித்தேன்'' என்று இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரான நடாளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கைக்கான புதிய தூதுவராகப் பதவியேற்றுக்கொண்ட இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தனது முதலாவது பயணமாக வடக்குக்கு வந்துள்ளர். நேற்றிரவு யாழ்ப்பாணம் நோத் வே கேற் சொகுசு விடுதியில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்க் கட்சித் தலைவர்கள், வடக்கு மாகாண அவைத் தலைவர், சிவில் சமூகப்பிரதிநிதிகள் ஆகியோரை இரவு விருந்துடன் சந்தித்துப் பேசினார் அவர்.

ஒதுக்கப்பட்டிருந்த மேசைகளில் அமர்ந்திருந்தவர்களுடன் சிறிது நேரம் தனித் தனியாகச் செலவிட்டு இந்தியத் தூதுவர் கலந்துரையாடினார். அவர்களின் கருத்துக்களைக் ☞ 8

## ஜே.வி.பியின் கொள்கை தெரிந்துதான் இந்தியா எம்மை அழைத்துப் பேசியது

### சுனில் ஹந்துல்நெத்தி தெரிவிப்பு

ஜேவிபியின் கொள்கை என்னவென்று புரிந்துகொண்டுதான் இந்தியா எம்மை அழைத்துப் பேசியது என்று அந்தக் கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் சுனில் ஹந்துல்நெத்தி தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் மக்கள் சக்திப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித் ☞ 2

## அதிக டெங்கு பரவும் மாவட்டத்தில் யாழ்ப்பாணமும் முன்னணியில்

இலங்கையில் அதிகளவில் டெங்கு பரவும் மாவட்டங்களாக கம்பஹா கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகியனவே பதிவாகி உள்ளன என்று கண்டி மாவட்ட தொற்றுநோய் நிபுணர் வைத்தியர் கிருஷான் மசாராச்சி தெரிவித்தார்.

கண்டி மாவட்ட செயலக அலுவலகத்தில் நேற்று நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கண்டி மாவட்டத்தில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் ☞ 8

## புதிய 'லொத்தர்' சீட்டு நேற்று அறிமுகம்

தேசிய லொத்தர் சபையினால் 2023 ஆம் ஆண்டு விற்பனை செய்யப்பட்ட லொத்தர் சீட்டுக்களின் சூப்பர் பரிசு மற்றும் மில்லியன் பரிசுத் தொகைகளுக்கான காசோலைகள் மற்றும் வாகனங்களை வென்றவர்களுக்கான ஆவணங்களை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நிதி அமைச்சின் கேட்போர்கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, கொவிசெத, மெகா பவர், மெகா பவர் 60 உள்ளிட்ட லொத்தர் சீட்டிழுப்புக்களின் வெற்றியாளர்களுக்கான பணப்பரிசு மற்றும் வாகன பரிசுகள், விற்பனை முகவர்களுக்கான ஊக்குவிப்பு பரிசுகள், சான்றிதழ்கள் என்பனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் வழங்கி வைக்கப்பட்டன.

அதற்கு மேலதிகமாக தேசிய லொத்தர் சபையினால் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் 'அதசம்பத' புதிய லொத்தர் சீட்டை வெளியிடும் ☞ 2

### அடுத்த ஜனாதிபதித் தேர்தலில்

## அமைச்சர் பிரசன்னவின் முழு ஆதரவும் ரணிலுக்கே

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிட்டால் அவருக்கே தனது ஆதரவு என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் விடுதலை முன்னணியினர் தமது கடந்த கால நிலைப்பாடுகளில் இருந்து மாறிவிட்டனர் என்று கூறுகின்றார்கள். ஆனால் 'அரகலய'வின் போது வீடுகள் எரிக்கப்பட்டன. கொலைகள் நிகழ்ந்தன.

அவர்கள் மாறியிருந்தால் அந்தச் சம்பவங்கள் எல்லாம் எவ்வாறு நிகழ்ந்திருக்க முடியும் என்ற கேள்விகள் உள்ளன. மக்கள் விடுதலை முன்னணி மாறியதாக கூறினாலும் இன்னமும் அந்தக் கட்சி அடிப்படையில்

## தமிழ் மக்களுக்கு இந்தியாவுடன் உள்ள வரலாற்று பிணைப்பை உணர்கிறோம்

### யாழ்ப்பாணத்தில் இந்தியத் தூதுவர் தெரிவிப்பு





யாழ்ப்பாண மக்களுக்கும் இந்தியாவுக்குமான வரலாற்றுப் பிணைப்பை உணர்கின்றோம் என்று இலங்கைக்கான இந்திய ☞ 2

## கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிற்றூழியர்களால் நேற்றுப் பரபரப்பு

### பிரதிப் பணிப்பாளருக்கு எதிராகத் திடீர் போராட்டம்

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் வெல்லனவுக்கு வைத்தியசாலையின் சிற்றூழியர்களுக்கும் இடையில் நேற்று முரண்பாடு ஏற்பட்டது.

வைத்திய அதிகாரிகள் அறையில் அவரைத் தடுத்துவைத்திருந்ததோடு அவருக்கு எதிராக கடுமையான கோசங்களையும் எழுப்பினார்கள். இதனால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

72 சுகாதாரத் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து பணி நிறுத்தப் ☞ 2

## தமிழ் அரசுக்கு எதிரான சூழ்ச்சிகளை மக்களின் ஆதரவோடு முறியடிப்போம்

### புதிய தலைவராகத் தெரிவான சிறீதரன் தெரிவிப்பு

கட்சிக்கு எதிராக எந்த சூழ்ச்சிகள், தடைகள் வந்தாலும் மக்களின் ஆத்மபலத்துடன் அதனை முறியடிப்போம், எத்தனை வழக்குகள் வந்தாலும் எதிர்கொள்வோம் என தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சி சிறிதரன் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாடு பெப்ரவரி 19 திருகோணமலையில் நடைபெறவிருந்த நிலையில், திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட நீதிமன்றங்களில் மாநாட்டுக்குத் தடை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணைகளை அடுத்து, இரு மாவட்ட நீதிமன்றங்களினாலும், மாநாட்டிற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடை ☞ 9

## இனி இது .....

நீதிமன்றில்தாக்கல்செய்யப்பட்டுள்ள மனுக்களில் கோரப்பட்டுள்ளது. இந்த மனுக்கள் தொடர்பில் கட்சி கேட்டுக்கொண்டால் தான் நீதிமன்றத்தில் அந்த வழக்குகளை எடுத்து நடத்துவார்என்றுசுமந்திரன்ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்திருந்தார். ஆனால், நேற்றிரவு வரையில் அது தொடர்பில் கட்சியின் இன்றைய தலைவர் சிறீதரனோ முன்னாள் தலைவர்மாவை சேனாதிராசாவோ தன்னுடன் எதுவும் பேசவில்லை என்று சுமந்திரன் கூறியிருக்கிறார்.

அது தவிர, ''அந்த நீதிமன்ற ஆவணங்களில், கட்சியின்நிர்வாகச் செயலாளருக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தால் அனுப்பப்பட்ட ஒரு ஆவணத்தைத்தான் நான் இன்று (நேற்று) பார்த்தேன். மற்றைய நீதிமன்ற (திருகோணமலை) ஆவணம் இன்னமும் கட்சியிடம் சேர்ப்பிக்கப்படவில்லை என்று நினைக்கின்றேன்.

எமதுகட்சியாப்பிலேஇருக்கின்ற சில சரத்துக்கள் மீறப்பட்டுள்ளதாகச் சொல்லித்தான்இந்தவழக்குகள்பதிவு செய்யப்பட்டுள்ளன. அப்படியான யாப்பு மீறல் இருக்குமாக இருந்தால் அதனை நிவர்த்தி செய்து, நாங்கள் அடுத்தடுத்த நடவடிக்கைகளுக்குச் செல்லலாம் என்பது எனது கருத்து. ஏனென்றால்ஒருகட்சியின்நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது நெறிப்படுத்துவது அந்தக் கட்சியின் யாப்பு மட்டும்தான்.

பல தடவைகளிலே நாங்கள் சில விடயங்களைக் கவனிப்பதில்லை. அப்படிக் கவனிக்காமல் இருக்கின்றபோது அது ஒரு பழக்கமாகவேவந்துவிடும்.அதையாராவது சவாலுக்கு உட்படுத்தினால்தான் அந்தப் பிரச்சினை வெளிப்படும். யாப்பிலே இருக்கின்ற விடயங்கள் சரியாக ஒழுகப்படவில்லை என்பது சுட்டிக்காட்டப்படுமாகஇருந்தால்ஒரு பொறுபபான அரசியல் கட்சியாக அதனைத் திருத்தி யாப்பின்படி செயற்படுவதுதான் சரியான முறைமைஎன்றுநான்கருதுவேன்" என்று தெரிவித்திருக்கிறார்.

சுமந்திரன் பொடி வைத்துப் பேசுகின்றார் போன்றே தெரிகின்றது. திருகோணமலையில் நடந்த பொதுச் சபைக் கூட்டம் தொடர்பில் கட்சித் தலைவருக்கு அறிக்கையிடும் விதத்தில் அவர் எழுதிய கடிதத்திலேயேகூட, அந்தக் கூட்டத்தின் பல சட்டச் சிக்கல்கள் குறித்தும் தெரியப்படுத்தியிருப்பார். அப்படிப்பட்ட நிலையில், யாப்பு மீறப்பட்டிருந்தால் அவற்றை யாப்பின்படி திருப்பிச் செய்வதே சரி என்று அவர் கூறுவது தலைவர் பதவிக்கான தேர்தலையும் உள்ளடக்கியதுதான் என்று தாராளமாக அர்த்தப்படுத்திக் கொள்ளலாம்.

வழக்குகளிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் முக்கிய விடயங்களில் ஒன்று கட்சியின் பொதுச் சபைக்கு யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதிலும் பார்க்க மிக அதிகளவிலானஉறுப்பினர்கள்நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது. அதனைத்திருத்துவதானால் கட்சித் தலைவர் தெரிவு உள்ளிட்ட அனைத்து விடயங்களும் மீளவும் செய்யப்படவேண்டும். கட்சித் தலைவர்பதவிக்குமீண்டும்தேர்தல் நடத்தப்படவேண்டும்.

கட்சியின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரான சிறீதரன், எத்தனை வழக்குகள் போடப்பட்டாலும் அவற்றையெல்லாம் எதிர்கொண்டு முறியடிப்போம் என்று சூளுரைத்துள்ள நிலையில் இந்த வழக்குகள் மூலம் அவரது கட்சித்தலைமைப்பதவியே கேள்விக்குள்ளாகப்போகின்றது போன்று தெரிகின்றது. அவரது தரப்பு சட்டத்தரணிகள் நீதிமன்றில் இதனை எப்படி எதிர்கொள்ளப் போகின்றார்கள் என்பதைப் பொறுத்தே கட்சித் தலைவரின் தலைதப்புமா இல்லையா என்பதும் இனித் தெரியவரும்.

ஆக மொத்தத்தில் மாவை சேனாதிராசாவே கட்சிக்குத் தொடர்ந்தும் தலைவராக இருக்கப்போகிறார் என்பதுதான் நிலமை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 10 வயதுச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது அம்மம்மா வீட்டில் வசித்துவந்த சிறுமி அருகில் இருந்த கடைக்குச் சென்ற பின்னர் வீடு திரும்பவில்லை. நீண்ட நேரமாகியும் சிறுமி வீடு திரும்பாததை அடுத்து அவரை எங்கு தேடியும் காணாத உறவினர்கள் பொலிஸில் முறையிட்டனர்.

நேற்றுக் காலை உறுவினர்கள் தொடர்ந்து தேடியபோது சிறுமியின் சடலத்தை தென்னத் தோட்டத்தில் கண்டுபிடித்தனர்.

சிறுமியின் பெற்றோர் புத்தளம் மாவட்டம் பூங்குளம் பகுதியில் தங்கியிருந்து தொழில் செய்து வருகின்றனர். சிறுமியும் 3 சகோதரர்களும் அவர்களது அம்மம்மாவுடன் தலைமன்னாரில் தங்கியிருக்கின்றனர்.

சிறுமி காணாமற்போனதும் குறித்த தென்னை தோட்டத்திற்குச் சென்று சிறுமி குறித்துச் சந்தேகநபரிடம் விசாரித்தபோது தனக்கு எதுவும் தெரியாது என அவர் தெரிவித்திருந்தார் என்று சிறுமியின் உறவினர்கள் தெரிவித்தனர்.

அப்பகுதியில் உள்ள மறைகாணியில் பதிவாகியிருந்த காணொலியைப்பார்வையிட்டபோது குறித்த சிறுமியின் பின்னால் சந்தேகநபர் செல்வது தெரியவந்தது. அதனை அடுத்து அவர் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டார்.

பொலிஸாரிடம் சந்தேகநபர் வழங்கிய அவரது அடையாள அட்டையில் கே.வி.அப்துல் ரகுமான் (வயது-52) குச்சவெளி திருகோணமலை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் குறித்த நபர் தலைமன்னாரில் வியஜேந்திரன் என்ற பெயரிலேயே நடமாடி வருகின்றார் என்பதும் தெரிய வந்திருக்கிறது.

சந்தேகநபர் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர் என்றும் இதனால் மனைவியை விட்டுப் பிரிந்து வாழ்கின்றார் என்றும் கொல்லப்பட்ட சிறுமியின் அம்மம்மாவே இவருக்கும் உணவு வழங்கி வருகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த மன்னார் பதில் நீதிவான் விசாரணைகளின் பின்னர் உடற்கூறு பரிசோதனைக்காக சடலத்தை மன்னார் மாவட்டப்பொது வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

சட்ட வைத்திய அதிகாரி, தடயவியல்பொலிஸார்ஆகியோரும் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினர்.

இந்தக் கொலையால் பேரதிர்ச்சி அடைந்துள்ளதலைமன்னார்மக்கள் வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். குற்றவாளியை உடனடியாகத்தூக்கில்போடுமாறும் வலியுறுத்தினர். விசாரணைகளை விரைவாக முடித்து குற்றவாளிக்கு உரிய தண்டனையை விரைவில் வழங்குமாறு கோரும் மனு ஒன்றையும்,அங்குவிசாரணைக்காக வந்திருந்த பதில் நீதவானிடம் கையளித்தனர்.

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்ஆணையர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் பொதுமக்களுக்கு நிவாரணப்பொதிகளை வழங்கி வைக்கும்நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்மக்கள்தொடர்பில்இந்தியாவுக்குப்பெரும்அர்ப்பணிப்புஉள்ளது. அதற்காகத்தான் யாழ்ப்பாணம் வந்திருக்கின்றேன். எமக்கும் இங்குள்ள தமிழ் மக்களுக்குமான வரலாற்றுப் பிணைப்பினை நாம் உணர்கின்றோம். இங்குள்ள மக்களுக்கான ஆதரவினை வழங்குவதற்கு நாம் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்த வருகையின்போது நான் பல்வேறு வழிபாட்டுப் பகுதிகளுக்கும் சென்றிருந்தேன். குறிப்பாக ராம்சேதுப் பகுதிக்கும் சென்றேன். மஹாவிகாரைக்கும் சென்றிருந்தேன். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கும் சென்றிருந்தேன். பல்வேறு விடயங்களையும் அவதானித்துள்ளேன்.

சூரிய சக்தி மின்திட்டம் இரண்டு தீவுகளில் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் நாம் நையினா தீவுக்கும் சென்றிருந்தோம். நாம் எதிர்காலத்தில்பல்வேறுதிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்கின்றோம் என்றார்.

முன்னதாக மன்னாருக்குச் சென்றிருந்த உயர் ஆணையர், தாழ்வுப்பாடு கடற்படை முகாமிலிருந்து கடற்படைக் கப்பல் மூலம் இரண்டாவது மணல் திட்டுக்குச் சென்றிருந்த உயர்ஆணையர், அங்கு ராமர் பாலம் உள்ளிட்ட பகுதிகளைப் பார்வையிட்டதோடு வழிபாடுகளிலும்பங்கேற்றிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் நயினா தீவு நாகபூசனி ஆலயத்துக்குச் சென்றிருந்த அவர், அங்கு வழிபாடுகளில் ஈடுபட்டதோடு, நாகவிகாரைக்கும் சென்று வழிபாட்டார். இதேநேரம், காங்கேசன்துறைஇறங்குதுறைக்கும் சென்றிருந்த அவர், பலாலி விமான நிலையத்திற்கும் சென்று பார்வையிட்டார்.

*ரூ. 10 ஆயிரம் சம்பள அதிகரிப்பின் பின்னரும்*

# சுகாதார ஊழியர் பணிநிறுத்தம் எந்த வகையிலும் நியாயமற்றது

**ஜகத் குமார எம்.பி. பாய்ச்சல்**

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா வாழ்வாதார கொடுப்பனவை ஆளும் தரப்பு வழங்கியுள்ளது. எனவே சுகாதார தொழிற்சங்கங்களின் வேலை நிறுத்தம் நியாயமற்றது என பகிரங்க மற்றும் பொறுப்புக்கூறலுக்கான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக்குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ராஆராய்ச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச நிறுவனங்களில் உள்ள பெருமளவான அதிகாரிகள் மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குகின்றனர். ஆனால் சில அதிகாரிகள் பொறுப்பற்ற விதத்தில் செயல்படுவது தெரிய வந்துள்ளது. மக்களுக்கான சேவைகள் உரிய வகையில் வழங்கப்படுவதில்லை என்பதையும் காண முடிகிறது. சில நேரங்களில் அரச சேவைகளின்நியமனங்கள்மற்றும் இடமாற்றங் கள் வழங்கப்படாமல் இருப்பதற்கும் அரச அதிகாரிகள் சிலரது செயல்திறனற்ற செயற்பாடுகளே காரணமாக உள்ளன.

அரசியல் அதிகா ரத்துக்குள் காணப்படும் பிழைகளை அவர்கள் சுட்டிக்காட்டினாலும், உயர்மட்ட அதிகாரிகள் சிலர் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுகின்றனர். அரசியல் வாதிகளை தூற்றுவதால் மாத்திரம் நாட்டை கொண்டுச் செல்ல முடியாது. அரசஅதிகாரிகள்தமது தனிப்பட்ட நோக்கங்களுக்காகச் செயற்படவும் முடியாது.

நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு அழைக்கப்படும் போதும் சில அதிகாரிகள் தமக்கு எவ்வித பொறுப்புக்களும்இல்லையெனக்கூறி அழைப்பைப் புறக்கணிக்கின்றனர். சுயாதீன ஆணைக்குழுக்களும் நாடாளுமன்றத்திற்குபொறுப்புக்கூற வேண்டுமென அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான நிலையிலும் மக்கள் உரிமைகள் பெருமளவில் மீறப்படுகிறது.

சிறந்த செயலாற்றுவதற்கு வெளிப்படையானதும், நேர்மையானதுமான அரசசேவையொன்று அவசியமாகும்.

தற்போதையநிலைமைகளுக்குத் தீர்வுகளைத் தேடும் வகையில் பெப்ரவரி 19 சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்றத்தில் அமைச்சுகளின் செயலாளர், மாகாண, மாவட்ட, பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட மக்களுடன் நெருக்கமாக பணியாற்றும் அதிகாரிகளுக்கான விசேட செயலமர்வொன்றை நடத்த தீர்மானித்துள்ளோம். அதன்போது மக்களுக்கு செயல்திறனுடனும், சிநேகபூர்வமானதுமானசேவையை எவ்வாறு வழங்க முடியும் என்பது குறித்து விளக்கமளிக்கப்படவுள்ளது.

அதேபோல் நெருக்கடியிலிருக்கும் காலத்திலும் அரச ஊழியர்களுக்கு 10,000 சம்பள அதிகரிப்பைநாம்வழங்கியுள்ளோம். அவ்வாறிருந்தும் மக்களை நெருக்கடிக்குள் தள்ளும் வகையில் வேலைநிறுத்தங்களை செய்வதை அனுமதிக்க முடியாது. தொழிற்சங்க தலைவர் என்ற வகையில் இவ்வாறான வேலைநிறுத்தங்கள் கண்டிக்கத்தக்கவை என்றார்.

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தினை முன்னெடுத்தபோது பிரதிப் பணிப்பாளர் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே சிற்றூழியர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

''அவர்கள் என்னை எனது அறையில் முடக்கி கோசங்களை எழுப்பினார்கள்'' என்று பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் வெல்லன தெரிவித்தார்.

"நோயாளிகளுக்குநான்ஆதரவு தெரிவித்து வெளியிட்டு கருத்துக்கள் தம்மைப்பாதித்ததாக தொழிற்சங்கப் போராட்டத்துக்கு சூத்திரதாரியாக இருக்கும் ரவி குமுதேஷ் எனக்கு எதிராக சிற்றூழியர்களைத் தூண்டி விட்டுள்ளார்'' என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

"கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர்ருக்ஷான்வெல்லனவின் கருத்துக்களுக்கே சிற்றூழியர்களால்பதிலளிக்கப்பட்டுள்ளது. ஆகவே அவரை உடனடியாக அப்பதவியிலிருந்து நீக்க வேண்டும். அதன் மூலமாகவே சுமூகமான நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்"என்றுசுகாதாரதொழிற்சங்க ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ரவிகுமுதேஷ் தெரிவித்தார்.

## புதிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வும்இதன்போதுஇடம்பெற்றது. அதன் முதல் சீட்டு தேசிய லொத்தர் சபையின் தலைவர் சீ.யாபா அபேவர்தனவினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

பின்னர் தேசிய லொத்தர் சபையின் முன்னாள் தலைவர் சட்டத்தரணி ரெனோல்ட் சீ. பெரேரா ஆற்றிய சேவைகளைப் பாராட்டும் வகையில்தேசியலொத்தர்சபையின் சார்பில் ஜனாதிபதியால் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

தேசிய லொத்தர் சபை 2023 ஆம் ஆண்டுக்கான வருமானத்தில் 7.1 பில்லியன் ரூபா நிதியை அரச ஒருங்கிணைந்த நிதியத்திற்கு வழங்கியுள்ளது. அதற்மைவான காசோலை தேசிய லொத்தர் சபையின் தலைவர் சமீர. சீ.யாப்பாவினால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்துவருகைதந்திருந்தலொத்தர் சீட்டிழுப்பு வெற்றியாளர்களுக்கான பணப் பரிசு, வாகன பரிசு, விற்பனை முகவர்களுக்கான பணப் பரிசு, சான்றிழ்கள் என்பன நிதி இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்லாபிட்டிய மற்றும் செஹான்சேமசிங்கஆகியோரினால் வழங்கப்பட்டன.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, திறைசேரியின் பிரதி செயலாளர்களான டபிள்யூ.ஏ.சரத்குமார, ஆர்.எம்.பி. ரத்நாயக்க, ஏ.கே.செனவிரத்ன உள்ளிட்டவர்களுடன் நிதி அமைச்சின் அதிகாரிகள், தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், சீட்டிழுப்பு வெற்றியாளர்கள், விற்பனை முகவர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## ஜே.வி.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ததாவது:

இந்தியா தேசிய மக்கள் சக்தியை அழைத்து திருப்பதியை வழிபடுமாறோ இல்லை வேறெந்த வழிபாட்டுத்தலங்களுக்கும் செல்லுமாறோ கோரவில்லை. உள்நாட்டில் காணப்பட்ட நிலைமைகளை அவதானித்து, எமதுநியாயமானகொள்கைகளைப் புரிந்துகொண்டுதான் இந்தியா எமக்கான அழைப்பினை விடுத்திருந்தது.

அந்தவகையில்எமதுகட்சியின் தலைவர் அந்தச் சந்திப்புக்களில் பங்கேற்றிருந்தார். அவருடன் கட்சியின் சக சகோதரர்களும் பங்கேற்றிருந்தார்கள். இந்த விடயம் தற்போது இங்குள்ள அரசியல் கட்சிகளுக்கு கலகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனால்தான் அவர்கள் வெவ்வேறு கதைகளைக் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். அந்தக் கருத்துக்களுக்கு நாம் அடிபணிய முடியாது. அவற்றில் உண்மைகளும் இல்லை. கடந்த காலத்தில் இலங்கையில் இருந்து இந்தியாவுக்குச்சென்றதலைவர்கள் தமது நிறைக்கு நிகரான பொன் அல்லது பணத்தை திருப்பதிக்கு வழங்கினார்கள். அதிகாரம் தமக்கு வேண்டுமென்று கேட்டு வழிபட்டார்கள்.

தற்போதுகூட, நாமல்பேபி,

தொடர்ச்சி 8ம் பக்கம்....

Muthukumaru Maths Academy
இல.19, நாயன்மார் வீதி, நல்லூர்.
தரம் 6-11 கணிதம் ஆங்கிலமொழிமூலம் குழு வகுப்புக்கள்
MATHEMATICS ENGLISH MEDIUM GROUP CLASSES
புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 19.02.2024
தொடர்பு: 077 864 5971
Mathematics is queen of science.

காலைக்கதிர் Kalaikkathir

# தேசிய புலனாய்வு பிரிவிற்கு வவுனியாவில் காணி வழங்க வடக்கு ஆளுநர் பரிந்துரை

## மாவட்ட ஒருங்கிணைப்புகுழு எதிர்ப்பு

வவுனியா, பூங்கா வீதியில் அமைந்துள்ள அரச காணியில் தேசிய புலனாய்வு அலுவலகத்திற்கு காணி வழங்குவதற்கு வடமாகாண ஆளுநர் பீ.எச்.எம்.சாள்ஸ் பரிந்துரைத்துள்ள நிலையில், மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் அதற்கு வியாழக்கிழமை எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

காணியற்ற அரச திணைக்களங்களான அரச ஒசுசல, புவிச்சரிதவியல் திணைக்களம், தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, பனை அபிவிருத்திசபை, சமூக நீர்வழங்கல் திணைக்களம், தேசிய புலனாய்வு அலுவலகம் மற்றும் பொது அமைப்புக்களான முச்சகரவண்டி உரிமையாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், பேருந்து உரிமையாளர் சங்கம், பாரவூர்திசங்கம், ஓய்வூதியர் சங்கம், ஊடகவியலாளர் சங்கம் ஆகியன தமக்கு நகரப் பகுதியில் காணி ஒதுக்கித் தருமாறு வவுனியா பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தன எனத் தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைய குறித்த அமைப்புக்களுக்கு வவுனியா பூங்கா வீதிப் பகுதி மற்றும் திருநாவற்குளம் பாரவூர்தி தரிப்பிடம் அமைந்துள்ள பகுதி ஆகியவற்றை பிரித்து வழங்குவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவிடம் அனுமதி கோரப்பட்டிருந்தது.

இதன்போது, பூங்கா வீதியில் அமைந்துள்ள காணி தேசிய புலனாய்வு அலுவலுகத்திற்கு வழங்குவதற்காக வடக்கு மாகாண ஆளுநர் பீ.எச்.எம்.சாள்ஸால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, காணியை அவர்களுக்கு வழங்குவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத்தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

இதன்போது, மாவட்ட ஒருங்கிணைபபுக்குழுத் தலைவர் கு.திலீபன் கருத்து தெரிவிக்கையில், பூங்கா வீதியில் அமைந்துள்ள இடம் தேசிய புலனாய்வுப் பிரிவுக்கு வழங்குவதற்கு ஆளுநரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நாங்கள் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலும் அதை நிராகரித்தோம். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் நிராகரிக்கின்றோம். தேசிய புலனாய்வு திணைக்களத்திற்கு கொடுப்பதற்கு உடன்பாடில்லை. அதனை அரச திணைக்களங்களுக்கு அல்லது மாவட்ட சங்கங்களுக்கு வழங்க வேண்டும் என முடிவெடுக்கின்றோம் எனத் தெரிவித்தார்.



வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கருத்து தெரிவிக்கையில், வவுனியா மாவட்டத்தில் பல திணைக்களங்கள், பல சங்கங்கள் தமக்குக் காணி இல்லை என நீண்டகாலமாக கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். அவர்களுக்கு காணி வழங்கப்படவில்லை. தேசிய புலனாய்வு பிரிவுக்கு நகரப் பகுதியில் காணி தேவையில்லை. அவர்கள் எங்கும் இருக்க முடியும். இரகசியமாக அவர்கள் இருக்க வேண்டியவர்கள். பொலிஸிற்குள் கூட இருக்க முடியும். அந்த இடம் பொது அமைப்புக்களுக்கு கொடுப்பது தான் பொ ருத்தமாக இருக்கும் எனத் தெரிவித்தார். (05-100)

# இராணுவத்தினரின் நலனை மேம்படுத்த புதிய திட்டங்கள்



*இராணுவத்தில் கடமையாற்றும் அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினரின் நலனை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில், இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகேயின் அறிவுறுத்தலின் பேரில், சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளை உள்ளடக்கிய பல நிகழ்ச்சிகள் இராணுவ தலைமையகத்தில் இடம்பெற்றன.*

*அதன்போது, இராணுவ உறுப்பினர்கள், அவர்களின் நெருங்கிய உறவினர்கள், நலன்புரி அறக்கட்டளையில் உறுப்புரிமைப் பெற்றுள்ள ஓய்வுபெற்ற அதிகாரிகள், சிபபாய்களின் திட்டமி டப்பட்ட தீவிர அறுவைச் சிகிச்சைகள் மற்றும் தீவிரமற்ற அறுவைச் சிகிச்சைகள் தொடர்பில் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வாக 'கேஸ்லெஸ் மெடி கிளைம்' எனும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.*

*இத்திட்டத்துடன் தொடர்புடைய சுவாசஹன காப்புறுதி நிதியத்தின் கீழ் வைத்தியசாலை கட்டணங்களை நேரடியாகச் செலுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடுதல் மற்றும் பரிமாற்றமானது இராணுவ தளபதி, வைத்தியசாலை பிரதிநிதிகளின் தலைமையில் இடம்பெற்றது.*

*இதன்படி, இத்திட்டத்தின் கீழ், நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள 33 தனியார் வைத்தியசாலை வலையமைப்புகளின் ஊடாக, புதன்கிழமை முதல் இராணுவ உறுப்பினர்கள் மற்றும் நலன்புரி நிதியத்தில் அங்கம் வகிக்கும் ஓய்வுபெற்ற போர்வீரர்களும் இந்த வசதிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகக் காணப்படுகிறது.*

*மேலும், ஆசிரி வைத்தியசாலை ஹோல்டிங்ஸ் பிஎல்சி, தேவைப்படும் வீரர்களின் குழந்தைகளுக்காக மாதாந்தம் இரண்டு இருதய அறுவை சிகிச்சைகளுக்கு நிதியுதவி வழங்குவதாக உறுதியளித்தது. மேலும், 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் தரம் 5 புலமைபரிசில் பரீட்சை யில் சிறந்து விளங்கிய, படையினரின் 635 பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன. அத்தோடு, போர்வீரர்களின் மகன்கள் மற்றும் மகள்களின் கல்வியை இலகுபடுத்தும் வகையில் பெறுமதியான 'கற்றல் நண்பன்' எனும் 300 இணைய விண்ணப்பங்களும் விநியோகிக்கப்பட்டன.*

*(05)*

# ஒலுவில் அல் ஹம்றா மாணவர்கள் தென்கிழக்கு பல்கலைக்கு வருகை





(நூருல் ஹுதா உமர்)

பல்கலைக்கழக அறிவுசார் வளங்களை சூழவுள்ள மாணவர்களும் தங்களது அறிவுவிருத்திக்கு பயன்படுத்த அனுமதிக்கும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிந்தனையின் கீழ் ஒலுவில் அல்-ஹம்றா வித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்விகற்கும் மாணவர்கள் வியாழக்கிழமை கலை கலாசார பீடம், தொழில்நுட்பவியல் பீடம் மற்றும் அஷ்ரப் ஞாபகார்த்த நூலகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களைப் பார்வையிட்டதுடன் கலை கலாசார பீடத்தில் இடம்பெற்ற அறிவுசார் செயலமர்விலும் கலந்துகொண்டனர்.

கலை கலாசார பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற அறிவுசார் செயலமர்வில் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் பிரதான பேச்சாளராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இந்நிகழ்வின் போது தொழிலநுட்பவியல் பீடத்தின் பீடா திபதி யூ.எல். அப்துல் மஜீட், கலை கலாசார பீட சமூகவியல் துறையின் துறைத்தலைவர் பேராசிரியர் எஸ்.எம்.ஐயூப் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.றிஸ்வான் ஆகியோரும் மாணவர்களின் உளவள விருத்தியோடு சம்பந்தப்பட்ட உரைகளை ஆற்றினர்.

அல்- ஹம்றா வித்தியாலய அதிபர் அஷ்செய்க் யூ.கே. அப்துர் றகீம், வலய தலைவர் ஏ.சி. இஸ்மாயில், பிரதி அதிபர் அஹமட் ஜ/மான், பிரதி அதிபர் ஜெ. வஹாப்டீன், பிரதி அதிபர் எம்.ஏ. கமறுன் நிஷா, வலய பிரதி தலைவர் எம்.ஏ. அஹமட் பாரிஸ், ஆசிரியர்களான எம்.ஏ.சி. எம். இஹ்சாஸ், எம்.ஐ. முஸ்பிறா, எம்.எஸ்.எம். சத்தார் ஆகியோர் கலந்துகொண்டதுடன் சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.ரீ. அகமட் அஷ்ஹர் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக வேலைப்பிரிவு மேற்பார்வையாளர் எஸ்.எம்.வி.எம். அலி அக்ரம் அவர்களும் இவர்களுடன் இணைந்திருந்தனர். (05)

கலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## விரிவான விசாரணை வேண்டும்

மன்னாரில் 10 வயதுச் சிறுமி ஒருத்தி கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்கிற செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது. வீட்டுக்கு அருகில் இருந்த கடைக்கு இரவு நேரத்தில் போய்விட்டுத் திரும்புவதற்கு இடையில் இந்தப் பயங்கரம் நடத்திருப்பது மேலும் அச்சமூட்டுகின்றது. இவ்வளவு பாதுகாப்பற்ற நிலமை ஏற்பட்டுவிட்டதா என்கிற பயத்தையும் கிலியையும் ஏற்படுத்துகின்றது.

சம்பவம் நடந்திருக்கக்கூடிய தலைமன்னார் பகுதி ஒரு ஒடுங்கிய சிறிய நிலப்பரப்பு. குடியிருப்புப் பகுதிகளில் மக்கள் தொகை அடர்த்தியும் அதிகம். அப்படியிருந்தபோதும் ஒரு சிறுமியை கண்ணிமைக்கும் நேரத்தில் கடத்திக் கொல்ல முடிந்திருக்கின்றது என்பது மோசமான ஒரு சூழலை விவரிக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் மாணவி வித்தியாவின் கொலை ஏற்படுத்திய தாக்கத்தையும் அதிர்ச்சியையும் மன்னார் சிறுமியின் கொலையும் ஏற்படுத்துகின்றது.

இந்தக் கொலை தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் உடனடியாகவே கைது செய்யப்பட்டிருக்கின்றார். அவரது அடையாள அட்டையில் காணப்படும் பெயர் ஒன்றாகவும் அவருக்கு ஊரில் வழங்கும் பெயர் ஒன்றாகவும் அமைந்திருக்கின்றது என்பது சந்தேகத்தை வலுப்படுத்தக்கூடியது. கொல்லப்பட்ட சிறுமியின் பின்னால் சந்தேகநபர் செல்லும் காணொலிகள் கிடைத்திருக்கின்றன, அதேபோன்று வியாழக்கிழமை இரவு சிறுமியைக் காணோம் என்று தேடியவர்கள் சென்று சந்தேகநபரிடம் விசாரித்தபோது அவர் தான் அந்தச் சிறுமியைக் காணவில்லை என்று தெரிவித்தார் என்றும் சொல்லப்படுகின்றது. இவையெல்லாம் சந்தேகங்களை வலுப்படுத்தும் வகையில் அமைந்திருக்கின்றன.

நீதிமன்றம் குற்றத்தை நிரூபித்–து சந்தேகநபரைக் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கும் வரையில் அவரை குற்றவாளியாகக் காண முடியாது என்றபோதும், இந்தக் கொலை தொடர்பில் தீவிரமாக விசாரணை நடத்துவது மட்டுமல்ல, வடக்கில் இதற்கு முன்னர் நிகழ்ந்த பல சிறுமிகளின் கொலைகள் தொடர்பான வழக்குகளுடனும் இதனைத் தொடர்புபடுத்தி விசாரணைகளை முன்னெடுக்கவேண்டியது அவசியம்.

பல வருடங்களுக்கு முன்னர் இதுபோன்றே யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதிகளிலும் சிறுமிகள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்கள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டதற்கான சான்றுகளும் கிடைக்கப்பெற்றிருந்தன. ஆனாலும் அந்தக் கொலைகள் தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. வெளி இடங்களில் இருந்து வந்தவர்களால் அந்தக் கொலைகள் நிகழ்த்தப்பட்டிருக்கலாம் என்கிற சந்தேகம் ஊர் மக்களிடம் இருந்தது. ஆனால் பொலிஸாரால் யாரையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அதுபோன்ற விடைகாணமுடியாத சிறுவர் கொலைகளுக்கும் மன்னார் சிறுமியின் கொலைக்கும் இடையே தொடர்புகள் இருக்குமா என்கிற கோணத்தில் அந்தப் பழைய வழக்குகளோடும் தொடர்புபடுத்தி விசாரணைகளை மேற்கொள்வது அவசியம். மன்னார் வழக்கில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கும் நிலையில் முன்னைய சம்பவங்களுடனும் அவரைத் தொடர்புபடுத்தி விசாரணைகள் முடுக்கிவிடப்படவேண்டும்.

இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாமல் தடுப்பதாயின் குற்றவாளியைக் கண்டுபிடித்து சரியான தண்டனை பெற்றுத் தருவது மிக மிக அவசியம். சிறுவர்கள் மீதான வன்முறைகள் எந்த வடிவத்திலானதாக இருந்தாலும் அதனைத் தடுத்து நிறுத்த முழு அளவிலான நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும்.

# தமிழ் திரைப்படங்களில் காதல்



“மச்சா அந்த பொண்ணோட ஃபுல் டீடெய்ல்ஸ் கலெக்ட் பண்றோம். நாளைல இருந்து ஃபா-லோ பண்றோம்” என்பது தான் தமிழ் சினிமா ஹீரோக்களின் உயர்ந்த லட்சியமும் குறிக்கோளும். மற்ற எல்லா வேலைகளைவிடமும் முக்கியமான வேலையாகவும், வாழ்வின் நோக்கமாகவும் கொண்டு விடாமுயற்சியாக பெண்ணை துரத்தி, காதலித்து, அவர் மறுப்பை ‘அடிடா அவள, வெட்றா அவள, ஒதடா அவள தேவையே இல்ல’ என வன்முறையாக்கி, இறுதியில் அவரை அடைந்தே தீருவதே தமிழ் திரைப்படங்கள் சொல்லிக் கொடுத்த ‘புனித’ காதல் கதைகள். ‘ஸ்டாக்கிங்’கை தங்களது கடின உழைப்பின் மூலம் ‘நார்மலைஸ்’ செய்த தமிழ் சினிமா இயக்குநர்கள் இப்போது வெகுவாக மாறிவிட்டனர்.

‘மௌன ராகம்’, ‘7ஜி ரெயின்போ காலனி’, ‘மின்னலே’, ‘பொல்லாதவன்’, ‘ஆடுகளம்’, ‘3’, ‘காதலன்’, ‘யாரடி நீ மோகினி’, ‘மயக்கம் என்ன’, ‘ரெமோ’, ‘சிவாஜி’, ‘குட்டி’ என அடிஷனல் சீட் வரை ‘ஸ்டாக்கி’ படங்களின் பட்டியல் நீளும். செல்வராகவனின் படங்கள் இதனை தெரிந்தோ, தெரியாமலோ ஊக்குவித்தே வந்துள்ளன. ‘7ஜி ரெயின்போ காலனி’ காதல் என்ற போர்வைக்குள் ஒளித்துவைக்கப்பட்ட ஸ்டாக்கிங் கதைக்களம் கொண்ட திரைப்படம்.



‘காதல் கொண்டேன்’ படத்தையும் இந்த லிஸ்டில் தாராளமாக சேர்த்துக்கொள்ள முடியும். போலவே ‘மயக்கம் என்ன’ சொல்லவே தேவையில்லை. ‘வெட்’ச் சொனன ஒருவனை காதலனாக ஏற்று திருத்தும் கதை. ‘பொல்லாதவன்’, ‘ஆடுகளம்’ போன்ற வெற்றிமாறன் படங்களிலும், இந்த பிரச்சினைகள் இருப்பதை உணரமுடியும். ‘ஸ்டாக்கிங்குக்கு’ தமிழில் ‘வாங்க பழகலாம்’ என புது வார்த்தையை கண்டுபிடித்து ‘சிவாஜி’ படத்தில் பயன்படுத்தினார் ரஜினி.



கடந்த 2016ஆ-ம் ஆண்டு வெளியான சிவகார்த்திகேயனின் ‘ரெமோ’ படத்தின் அதீத டார்ச்சர் விமர்சகர்களால் கண்டிக்கப்பட்டது. திருமணம் நிச்சயிக்கப்பட்ட பெண் என தெரிந்தும் விடாப்பிடியாய் இருக்கும் நாயகன், ‘பிடிக்கவில்லை’ என்று சொன்ன நாயகியின் உணர்வுகளை மதிக்காமல், மாறுவேடமிட்டு, துரத்திச் சென்று லவ் டார்ச்சர் செய்தது, தான் நினைத்ததை சாதிக்க துடிப்பது சைக்கோத்தனம். படத்தின் சில ஜிகினா சீன்களை கலைத்துவிட்டுப் பார்த்தால், கீர்த்தி சுரேஷின் திருமணத்தை நிறுத்தி தொல்லை கொடுத்த உண்மையான வில்லனே நாயகன் தான். ‘மின்னலே’ படமும் கூட கிட்டத்தட்ட இதற்கு நெருக்கமான கதைதான். இப்படியான காதலை க்ளோரிஃபை செய்ததன் விளைவு தான் அண்மையில் ட்ரெண்டான ‘கில்லி’ படத்தின் முத்துப்பாண்டியின் காதல் சிலாகிப்பு. உண்மையில் தமிழ் சினிமாவில் பெரும்பா லான காதல் படங்கள் முத்துப்பாண்டி வகையறா நாயகர்கள் பார்வையிலிருந்து விரிந்ததுதான். தனலட்சுமியின் (த்ரிஷா) சகோதரர்களைக்கொன்று, விருப்பமில்லை என சொல்லும் பெண்ணை செய்து அடைய நினைப்பதுதான் காதலா?

ஆனால், இப்போதைக்கு இந்த ஸ்டாக்கிங்கில் இருந்து விடுபட்ட தமிழ் சினிமா ‘டாக்சிக்’ அணுகுமுறையை கையில் எடுத்துள்ளதோ என சந்தேகம் எழுகிறது. சமீபத்தில் ஹிட்டடித்த பிரதீப் ரங்க நாதனின் ‘லவ் டுடே’ மிகச் சிறந்த உதாரணம். பெண்ணின் முழு சுதந்திரமும் தன் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என நினைக்கும் காதலன், காதலியின் மொபைல் போன் உள்ளிட்ட அனைத்தையும் உளவு பார்ப்பது, பின்தொடர்வது, டார்ச்சர் செய்வது, ‘மாமாகுட்டி’ என கேலி வார்த்தைகளால் அசிங்கப்படுத்துவது அதனை பொதுச்சமூகம் கைதட்டி கொண்டாடியது ஆபத்தானது.

படத்தில் நாயகனும் தவறிழைத்திருப்பார். ஆனால், அது பெரிதாக கண்டுகொள்ளப்படாமல் கடக்கப்பட்டிருக்கும். ஆனால், முழுக்க முழுக்க பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட பெண்ணை குற்றப்படுத்துவதன் மூலம் பொதுசமூகத்தின் வரவேற்பை அறுவடை செய்த அச்சுறுத்தலான ‘டாக்சிக்’ வெற்றியே பிரதீப் ரங்கநாதனின் ‘லவ் டுடே’.

அண்மையில் வெளியாகியிருக்கும் மணிகண்டனின் ‘லவ்வர்’ படம் இப்படியெல்லாம் ‘டாக்சிக்’கான ஆண்கள் இருக்கிறார்கள் என்பதை யதார்த்துக்கு நெருக்கமான படம்பிடிப்பு காட்டியிருக்கிறாம் என சொன்னாலும், அதன் முடிவு நச்சுத்தன்மை கொண்ட கதாபாத்திரத்தை ஹீரோவாக்கியிருப்பதும், பெண்ணை குற்றவுணர்ச்சிக்கு உள்ளாக்கியிருப்பதுதான் பிரச்சினை. பார்வையாளர்களுக்கே கோபம் வரும் அளவுக்கு நாயகியை டார்ச்சர் செய்யும் நாயகன் எந்த இடத்திலும் தனது தவறை உணர்ந்திருக்கவோ, காதலியின் உணர்வுகளுக்கு மதிப்பளித்திருக்கவோ மாட்டார்.

இறுதியிலும் கூட அப்பெண்ணின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து விலகாமல், தனது ‘ஈகோ’காரணமாக விலகி உணவகம் ஆரம்பித்து வாழ்க்கையில் முன்னேறுவதாக படம் முடியும். கடைசிவரை தனது தவறை உணராமல், எந்த பாதிப்புக்கும் ஆளாகாமல் வாழ்வில் வெற்றிபெறும் ‘டாக்சிக்’ காதலன் ஹீரோவாக போற்றப்படுவதும் அதனை உறுதி செய்யும் வகையில் திரையரங்குகளில் ஒலிக்கும் இளைஞர்களின் கைதட்டலும் தவறான முன்னுதாரணமல்லாமல் வேறென்ன? இப்படம் காதலர் தினத்தை முன்னிட்டு திரையரங்குகளில் வெளியாகியிருக்கிறது. ஆக ‘ஸ்டாக்கிங்’கில் இருந்து ‘டாக்சிக்’ நோக்கி நகரும் தமிழ் சினிமாவுக்கு கடிவாளமிடுவதோ அல்லது அதனை பாதிக்கப்பட்டவர்கள் பார்வையிலிருந்து கவனமாக கையாள்வதோ மிகவும் அவசியம்.

(நன்றி: இந்து தமிழ் திசை)

# ஜீவன் சந்திப்பு





இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக தெரிவாகியிருக்கும் சிவஞானம் சிறீதரனை மரியாதை நிமித்தம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறீதரனின் இல்லத்தில் இக்கலந்துரையாடல் இன்று காலை இடம்பெற்றது.

இதன்போது இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவராக தெரிவாகியிருக்கும் சிவஞானம் சிறீதரனுக்கு ஜீவன் தொண்டமான் வாழ்த்துகளை தெரிவித்து கொண்டார்.

இதன்போது நீர் வழங்கல் தொடர்பில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட உள்ள விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

## மனைவியும் மகளும் சமய நிகழ்வுக்கு சென்ற வேளை மகனுக்கு விசம் கொடுத்து உயிரை மாய்த்த தந்தை



தந்தையொருவர் மனநலம் பாதிக்கப்பட்ட தனது மகனுக்கு விசத்தை அருந்தக் கொடுத்துவிட்டு தானும் அதனைஅருந்திஉயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அங்குணுகொல பெலஸ்ஸ முறவசிஹேன பிரதேசத்தில் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதன்போது 50 வயதுடைய தந்தையும் 25 வயதுடைய மகனும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என அங்குணுகொலபெலஸ்ஸ பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மகன் சில காலமாக மனநலம் பாதிக்கப்பட்டிருந்துள்ளார். இதன் காரணமாக சம்பவதினம் காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு மகனை அழைத்துச் சென்று சிகிச்சை பெற்றுவிட்டு மதியம் வீடு திரும்பியுள்ளார் தந்தை.

இந்நிலையில், மனைவியும் மகளும் சமய நிகழ்வொன்றுக்காக வெளியே சென்றிருந்த வேளையிலேயே தந்தை தனது மகனுக்கு விஷத்தைக் கொடுத்துவிட்டு தானும் அதனை அருந்தியுள்ளார்.

மனைவியும் மகளும் வீட்டிற்கு வந்து பார்த்தபோது கணவனும் மகனும் விஷம் அருந்தியிருப்பதை அறிந்து அயலவர்களின் உதவியுடன் அங்குணுகொலபெலஸ்ஸ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும், இருவரும் ஏற்கனவே உயிரிழந்துள்ளனர் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் தங்காலை பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி. கீர்த்திரத்னவின் பணிப்புரையின் பிரகாரம் அங்குணுகொலபெலஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

## பெண் பொலிஸ் அலுவலருடன் பாலியல் சேஷ்டை: பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பணி நீக்கம்

பெண் பொலிஸ் கான்ஸ்டபிளிடம் பாலியல் சேஷ்டை புரிந்த குற்றச்சாட்டின் பேரில் கல்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் கல்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

முன்னதாக, கைது செய்யப்பட்ட நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட்ட பின்னர் அவருக்கு பிணை வழங்கப்பட்டது,

இது தொடர்பான வழக்கு மார்ச் 6 க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25இலட்சம்



5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# குருமண்வெளியில் ரன்விமன வீடு பயனாளியிடம் கையளிப்பு





( வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தின் குருமண்வெளி -11, மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் ரன்விமன வீடு பயனாளியிடம் கையளிக்கப்பட்டது. பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம் நேற்று முன்தினம் இன்றைய தினம் (2024.02.15) அவ் வீட்டை பயனாளியிடம் கையளித்தார்.

குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை சமூக ரீதியாக மேலுயர்த்துவது மற்றும் வீடற்றவர்களுக்கு வீடு வழங்குவது நோக்கமாகக் கொண்டு 2023ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது இவ் ரன்விமன வீட்டு வேலைத்திட்டம் ஆகும்.

அதன் கீழ் திருமதி.கருணாகரமூர்த்தி ராதிகா அவர்களுக்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் ரூபா 750,000ஃ- வழங்கப்பட்டிருந்ததோடு, பயனாளியின் பங்களிப்பாக ரூபா 1700,000ஃ-வுமாக மொத்தம் 2450,000ஃ- செலவில் இவ்வீடு நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி. சத்தியகௌரி தரணிதரன், தலைமையக முகாமையாளர் திருமதி.புவனேஸ்வரி ஜீவகுமார், கருத்திட்ட முகாமையாளர் திருமதி.விமலராணி யோகேந்திரன், எருவில் வங்கி முகாமையாளர் .எஸ்.ஆனந்தமோகன், சமூக அபிவிருத்தி உதவியாளர் தெ.உதயசுதன், கிராம சேவை உத்தியோகத்தர் திருமதி.நிரோசினி பிரசாந்த, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பே.அச்சுதன், திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திருமதி.மதனப்பிரியா சுந்தரலிங்கம், எஸ்.ஜெயகாந்தன், அலுவலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்பு உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆலய நிர்வாகிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்களின் நலன் கருதி நடமாடும் கண் பரிசோதனை

(அபு அலா)

கிராமப்புறங்களில் வாழும் மக்களின் நலன் கருதி, கொழும்பு கண்பரிசோதனை நிலையத்தால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்பரிசோதனை நடமாடும் சேவை நேற்று (வெள்ளிக்கிழமை) திருகோணமலை கோபாலபுர முஹைதீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

கொழும்பு கண்பரிசோதனை நிலையத்தின் கண்பரிசோதனை வைத்தியர் ஆர்.அருன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்த நடமாடும் கண்பரிசோதனையில் கண்பார்வை குறைபாடு, குறும்பார்வை குறைந்தவர்கள், கண்நோய் சம்பந்தப்பட்டவர்கள், தலைவலி மற்றும் கண்ணில் நீர் வடிதல், கண்கூச்சம் போன்ற கண்நோய் உள்ளவர்கள் தங்களின் கண்களை சிறந்த முறையில் பரிசோதனை செய்து கொண்டதுடன் அவர்களுக்கான மூக்குக்கண்ணாடியையும் பெற்றுக்கொண்டனர்.

குறிப்பாக, பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டு அவர்களுக்கான கண்பரிசோதனைகள் இடம்பெற்றதுடன் மூக்குக்கண்ணாடி வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (05)






## ஜே.வி.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராமர்கோவிலுக்குச்செல்கின்றார். இராமா எனக்கு எப்படியாவது அதிகாரத்தைப் பெறுவதற்கு ஒருவழியை காட்டிவிடு என்று இரஞ்சுகிறார். இப்படிதத்தான் இவர்களின் இந்தியப் பயணங்கள் உள்ளன என்றார்.

## அதிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதம்தற்போதுகுறைவடைந்துள்ளது. நாட்டிலேயே அதிகூடிய டெங்கு நோயாளர்கள் கண்டி தேசிய பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு வந்த காலமும் இருந்தது. ஆனால் தற்போது அது 5ஆவது இடத்திற்கு குறைந்துள்ளது.

கடந்த சில வருடங்களாக டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங் கள் வெற்றியடைந்தமையே எண்ணிக்கை குறைவதற்குக் காரணம்..

கொழும்பில் உள்ள தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள வாராந்த அறிக்கையின்படி, கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த 10 இடங்கள் நாட்டின் அதிக ஆபத்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அந்த எண்ணிக்கை 2 ஆகக் குறைந்துள்ளது. அதன் பிரகாரம் கடந்த வருடம் 20% டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்த நிலையில் தற்போது அது 12% ஆகக் குறைந்துள்ளது.

இந்தஅறிக்கைகளின்படிநாட்டின் அதிக டெங்கு நோயாளர்கள் உள்ள மாவட்டங்களாக யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் கம்பஹா ஆகியவை பதிவாகியுள்ளன.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டறிந்தார். பொதுவான அரசியல் கலந்துரையாடலாக எதுவும் இடம்பெறவில்லை. இந்தச் சந்திப்பு தன்னைப் பொறுத்தவரையில் ஒரு சம்பிரதாயபூர்வ சந்திப்பே தவிர, ஆழமானஅரசியல்கலந்துரையாடல் அல்லவென்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

சந்திப்பின் பின்னர் அது குறித்துக் கருத்துத் தெரிவித்த சி.வி.விக்னேஸ்வரன்”பொருளாதார ரீதியாக, செயற்றிட்டங்கள் ரீதியாக முன்னேற்றம் கண்டால் மக்களின் வாழ்க்கைமுன்னேற்றம்அடையும். அவர்களுக்கு வேலை கிடைக்கும். போக்குவரத்து இலகுவாக நடைபெறும். அதேநேரத்தில் அரசியல்ரீதியாகவும்நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம்என்றகருத்தை அவர்ளங்களுக்குத்தந்திருக்கின்றார்” என்று தெரிவித்தார்.

”இந்தியாவுக்கும்இலங்கைக்கும் இடையில் பாலம் அமைத்து அதற்கூடாக இணைப்பை ஏற்படுத்துவது சம்பந்தமாக இன்று நேற்றுச் சென்று மன்னாரிலே பேசிவிட்டு வந்திருக்கின்றார். இடத்தையும் பார்த்துவிட்டு வந்திருக்கின்றார். ஆகவே வெகு விரைவில் இணைப்பு தொடர்பான நடவடிக்கைகள் ஏற்படும் என்று நம்புகின்றேன்.

பலாலி விமானத் தள விரிவாக்கத்துக்காக 500 ஏக்கர் நிலத்தை இந்தியா கேட்டிருப்பதாக வெளியான செய்திகள் தொடர்பில் கேட்கப்பட்டதற்குத் தாம் அப்படி எந்த நிலத்தையும் கேட்கவில்லை என்று அவர் பதிலளித்தார். அப்படி எந்த எண்ணமும் தமக்கில்லை என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார்’’ என்றும் விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்றஉறுப்பினர்களன எம்.ஏ.சுமந்திரன், எஸ். சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன், தமிழ்த்தேசியக்கட்சித் தலைவர்ந.சிறீகாந்தா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தர் சிறீ சற்குணராசா உள்ளிட்ட சிவில் சமூ-கப் பிரதிநிதிகளும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# தற்காலிக அதிபரை வெளியேற்ற கிண்ணியாவில் ஆர்ப்பாட்டம்








(கிண்ணியா நிருபர் )

கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட குட்டிக்கராச்சி இஹ்சானிய வித்தியாலயத்தில் புதிதாக அதிபர் பரீட்சையில் சித்தி அடைந்த அதிபரை, கடமையைச் செய்ய இடையூறாக உள்ள தற்காலிக அதிபரை வெளியேற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இவ் ஆர்ப்பாட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 6.00 மணிக்கு பாடசாலைக்கு முன்னால் இடம் பெற்றது.

ஏற்கனவே இப்பாடசலையில் பதில் கடமை அதிபராக ஈடுபட்டு வந்த அதிபர்,புதிய அதிபரை கடமை ஏற்க இடையூறு ஏற்படுத்தி வருகிறார் எனக் கூறி அதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அப்பாடசாலை சமூகம் மற்றும் பொதுமக்கள், மாணவர்கள் நலன் விரும்பிகள் எனப் பலர் ஈடுபட்டனர். இதனால் பாடசாலைக்குள் மாணவர்கள் செல்லாமல் வீதி ஓரங்களில் தமது எதிர்ப்பினை தெரிவித்து இருந்தனர். இவர்களோடு ஏனையவர்களும் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் கிண்ணியா கொழும்பு மற்றும் கண்டி, கந்தளாய் முதலான இடங்களுக்குச் செல்லும் போக்குவரத்து வாகனங்களுக்கு இடையூறு ஏற்பட்டது.

இதனை அடுத்து கிண்ணியா வலயக் கல்வி அதிகாரிகளின் தலையீட்டினை அடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (05)

## தீகவாப்பிய பிரதேச வைத்தியசாலைக்கு திப்மிடல் அதிகாரிகள் களப் பயணம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அழைப்பிற்கு இணங்க தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் திறைசேரி என்பனவற்றிலிருந்து பணிப்பாளர்கள் மற்றும் பிஎஸ்எஸ்பி செயல்திட்ட அதிகாரிகள் தீகவாப்பிய பிரதேச வைத்தியசாலைக்கு கள விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸதீன் அவர்களின் வழிகாட்டலில் மற்றும் ஆலோசனையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம் சீ எம் மாஹிரும் பிரதேச வைத்தியசாலையின் பிரதேச வைத்திய அதிகாரியும் வைத்திய சாலையின் உத்தியோகத்தர்கள் ஊழியர்களும் கலந்து கொண்டனர். (05)

### ஜே.வி.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

மக்கள் விடுதலை முன்னணி தற்போது வெற்றியின் விளிம்பில் இருப்பதாகக்கூறுகின்றது. ஐம்பதுக்கு ஐம்பது சதவீதமான வெற்றி உறுதியாகிவிட்டதாகக்கூறுகின்றது. ஆனால்களநிலைமைகள்அவ்வாறு இல்லை. கற்பனைக்கு கள நிலவரத்துக்கும் வேறுபாடுகள் உள்ளன.

விசேடமாக ஐக்கிய மக்கள் சக்தியே பிரதான எதிரணியாக உள்ளது. அதுவே மாற்றத்தினை வழங்கப்போகின்ற கட்சியாகவும் உள்ளது. அந்தக் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசவே நாட்டிற்குத் தலைமைத்துவம் அளிக்கப்போகின்றார். கற்பனா வாதமும், யதார்த்த வாதமும் தேர்தலில் புரியும் என்றார்.

### தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே சிறீதரன் மேலும் தெரிவித்ததாவது:

எந்த வழக்கையும் எதிர்கொள்ளத் தயார். எமக்கெதிரான சூழ்ச்சிகள், தடைகளை நாம் மக்களின் ஆத்ம பலத்துடன் முறியடிப்போம்.

என்னையும் எனது கட்சியையும் குழப்பும், அச்சுறுத்தும் வகையில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இவற்றை கண்டு நாம் அஞ்சப் போவதில்லை.

என்னைத் தமது தலைவராக ஏற்றுக்கொண்ட கட்சியையும் எமது மக்களையும்இப்படியானசூழ்ச்சிகளால் முடக்க முடியாது. எத்தனை வழக்குகள் வந்தாலும் அதனை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். நீதி நிச்சயம் வெல்லும் என தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

## யாழில் நடைபெறும் இசை நிகழ்வுகளில் தமது நெறிப்படுத்தல் இனி இருக்குமாம்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இசை நிகழ்வில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு தமது நெறிப்படுத்தல்கள் இல்லாமையும் ஒரு காரணம் என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இசை நிகழ்வில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு எங்களுடைய இளைஞர்களைப் பலரும் குறை கூறுகின்றனர். நிகழ்வில் இளைஞர்கள் சிலர் தாக்குதலுக்கு இலக்காகினர் எனவும் அறிந்து கொண்டேன்.

நிகழ்வு தொடர்பில் யாழ். மாநகர சபை மற்றும் யாழ்ப்பாண பொலிஸார் கூடிய கவனம் செலுத்தி இருக்க வேண்டும். நானும் அதனைப் பார்த்து இருக்க வேண்டும். நானும் அது தொடர்பில் கரிசனை இல்லாமல் இருந்து விட்டேன்.



இனிவரும் காலங்களில் இப்படியான நிகழ்ச்சிகள் நடைபெறுமாக இருந்தால் , மக்கள் பிரச்சினைகள் இன்றி சந்தோசமாக நிகழ்வுகளைக் கண்டு களிக்க கூடியவாறான ஏற்பாடுகளைச் செய்வோம் எனத் தெரிவித்தார். (05)

## நுவரெலியாவில் நடுவீதியில் லொறி கவிழ்ந்து விபத்து



நுவரெலியாவிலிருந்து கண்டி நோக்கி சென்ற லொறி ஒன்று நேற்று (வெள்ளிக்கிழமை) விபத்துக்குள்ளாகியது.

நுவரெலியா - கண்டி பிரதான வீதியில் கொண்டக்கலை பகுதியில் வைத்து லொறி வீதியை விட்டு விலகி குடைசாய்ந்ததாக நுவரெலியா போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியாவில் தொடர்ந்து நிலவும் சீரற்ற வானிலையால் சாரதியின் கட்டுப்பாட்டைமீறி வாகனம் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது

குறித்த லொறியில் சாரதியும், உதவியாளரும் பயணித்தனர் என்றும், எனினும் சிறு காயங்களுடன் பாதுகாப்பாக உயிர் தப்பியுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இடத்தில் இதற்கு முன்னரும் பல விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன எனப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பொருளாதார நெருக்கடியால் தவிக்கும் பெண்கள் மீண்டெழ உணவு சார் உற்பத்தி நிலையம் திறப்பு

## செட்டிகுளம் - காந்திநகரில் அமைக்கப்பட்டது





பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள மக்களை மீண்டெழச் செய்யும் முகமாக செட்டிகுளம், காந்திநகரில் உணவு சார் உற்பத்தி நிலையம் ஒன்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

செட்டிகுளம், பெரியபுளியாலங்குளம் கிராம அலுவலர் அஸ்லம் அவர்களின் ஏற்பாட்டில் பல வருடங்களாக பயன்படுத்தப்படாது இருந்த கட்டடம் மக்களின் பொருளாதார விருத்திக்காக இதன்போது மாற்றியமைக்கப்பட்டது.

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குப்பட்ட பெரியபுளியாலங்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள காந்திநகர் பகுதியில் அமைக்கப்பட்ட பொதுக் கட்டடமானது கடந்த பல வருடங்களாக எந்தவித பயன்பாடும் இன்றி மூடப்பட்ட நிலையில் இருந்தது.

அதனை செட்டிகுளம் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சியான்மை பிரிவின் உதவியோடு, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் உதவியோடும் மின் இணைப்பு பெறப்பட்டு, ஐ.நா இணை நிறுவனமான யுஎன்டிபி நிறுவனத்தால் கட்டடம் மீள் திருத்தம் செய்யப்பட்டு இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

குறிப்பாக, அப் பகுதி மக்களின் வேலைவாய்ப்பு மற்றும் தேவை என்பவற்றைக் கருத்தில் கொண்டு உளுந்து உடைத்தல், எண்ணெய் திரித்தல், சத்துமா உற்பத்தி, வாசனை திரவிய உற்பத்தி என்பவற்றுக்கு ஏற்ற வகையில் இயந்திரங்கள் அமைக்கப்பட்டு குறித்த நிலையம் காந்திநகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. இதன்மூலம் அப் பகுதி பெண்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான குலசிங்கம் திலீபன், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், செட்டிகுளம் பிரதேச செயலாளர் இ.பிரதாபன், கிராம அலுவலர் அஸ்லம், கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், காந்திநகர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர், காந்தி நகர் மகளிர் அபிவிருத்திச் சங்கத்தினர், யுஎன்டிபி நிறுவனத்தினர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(05-100)

# 5 மாதத்திற்குள் மக்கள் கோரிக்கையை ஏற்று திருக்கோவில் மக்களுக்கு வீடுகள் கையளிப்பு







(ஹஸ்பர் ஏ.எச்)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்தை சேர்ந்த மக்களுக்கு ஐந்து மாதக் காலத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டன.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தை சேர்ந்த மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு ,வீடுகள் இன்றி இன்னல்களுக்கு முகம்கொடுத்து வந்த நிலையில், இவ்விடயம் தொடர்பாக அம்பாறை மாவட்ட அரச அதிபர்,திருக்கோயில் பிரதேச செயலாளர், அரச உத்தியோகஸ்தர்கள் மற்றும் பொதுமக்களால் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

ஆளுநர் செந்தில் தொண்டமான் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டு, மக்களின் குறைகளை கேட்டறிந்து மக்களின் கோரிக்கையை ஏற்று ஐந்து மாதக் காலத்திற்குள் அவர்களுக்கான வீடுகளை நிர்மாணித்து அம்மக்களிடம் கையளித்துள்ளார்.

திருக்கோவில் மாவட்ட மக்கள் தங்களது கோரிக்கையை குறுகிய காலத்தில் நிறைவேற்றியமைக்காக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் திருக்கோயில் பிரதேச செயலாளருக்கும் தங்களது நன்றிகளை தெரிவித்துள்ளனர்.

(05)

# கல்முனை கார்மேல் பற்றிமாவில் சிறப்புற்ற தைப் பொங்கல் விழா





( வி.ரி.சகாாதேவராஜா)

கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் வருடாந்த தைப்பொங்கல் விழா நேற்று (வெள்ளிக்கிழமை) கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ. றெஜினோல்ட் எவ்.எஸ்.ஸி. தலைமையில் சிறப்பாக நடைபெற்றது..

முன்னதாக மாட்டு வண்டி சகிதம் பாரம்பரிய முறைப்படி பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது.

அதிதிகளாக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் மகப்பேறு வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி கோ.வசந்தராஜா, அம்பாறை நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் திருமதி புவிராஜினி விஷ்ணுரூபன், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா , கல்முனை ஹற்றன் நாஷனல் வங்கி முகாமையாளர் ஏ. நிர்மலகுமார், பற்றியா 125 ஆவது ஆணாடு விழாக்குழு பொருளாளர் எஸ்.சிறிரங்கன் ஆகியோர் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டார்கள்.

அங்கு பற்றியா பழையமாணவர்களான வைத்தியர் வசந்தராஜா, பொறியியலாளர் புவிராஜினி ஆகியோர் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டாரர்கள்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# உயிருடன் இருப்பவர்களின் பெயர்களை பாடசாலைகளுக்கு சூட்டுவதற்குத் தடை

## கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த அதிரடி



(ஏ.எம்.ஆஷிப்)

உயிருடன் இருக்கும் அரசியல்வாதிகள் உட்பட பல்வேறு நபர்களின் பெயர்களை பாடசாலைகளில் இருந்து நீக்குமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த பணித்துள்ளார். இனிமேல் உயிருடன் இருக்கும் யாருடைய பெயரையும் பாடசாலைகள் மற்றும் கட்டடங்களுக்குப் பயன்படுத்த வேண்டாம் எனவும் அவர் உத்தரவிட்டுள்ளார். இது விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாகாண ஆளுநர்களையும் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் உட்பட பல்வேறு நபர்கள் உயிருடன் இருக்கும் போதே இவ்வாறு பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசியல்வாதிகள் உள்ளிட்ட தனி நபர்களின் பெயர்களை அரச பொதுக் கட்டடங்கள், பாடசாலைகள், வீதிகள் மற்றும் மைதானங்கள் உள்ளிட்ட எந்தவொரு அரச சொத்துக்களுக்கும் சூட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, உதவி வழங்குகிறோம் என்ற போர்வையில் அரசியல்வாதிகள் பாடசாலைகளுக்குச் சென்று அரசியல் பேச்சுக்களை நடத்துவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார். (05)

# மன்னாரில் அழகு நிறைந்த பிளாமிங்கோ பறவைகள்



(ஹஸ்பர் ஏ.எச்)

புலம்பெயர்ந்த பறவைகள் பிளாமிங்கோக்கள் இலங்கை மன்னார் பகுதியில் காணப்படுகிறன. இங்கு உணவு கிடைப்பது, வானிலை மற்றும் இனப்பெருக்க ஜோடிகளைத் தேர்ந்தெடுப்பது உள்ளிட்ட பல காரணங்களால் தங்கள் நாட்டிலிருந்து இலங்கைக்கு இப்பறவைகள இடம்பெயர்வது அறியப்படுகிறது.

இந்த இடம்பெயர்ந்த பறவைகளுக்குள், மிகவும் அரிதான மற்றும் மிகவும் உணர்திறன் கொண்ட பறவை பிளமிங்கோ ஆகும், தற்போது அவை அனைத்தும் மன்னாரில் குவிந்துள்ளன.

புலம்பெயர்ந்த காலம் எப்போதுமே பார்வையாளர்களுக்கு ஓர் உற்சாகமான நேரமாக உள்ளது. அவர்கள் மன்னாரின் ஈரநிலங்களில் ஐந்து மாதங்களுக்கும் மேலாக செலவழிக்கும் அழகான மற்றும் கம்பீரமான பிளமிங்கோக்களை ஓய்வு நேரத்தில் பார்க்கவும், ஆச்சரியப்படுத்தவும், படிக்கவும் மற்றும் புகைப்படம் எடுக்கவும் இணையற்ற வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

இந்த வகை பறவைகள் நவம்பரில் மாதம் வந்து, பொதுவாக ஏப்ரல் வரை இருக்கும். அவர்கள் இலங்கைக்கு இடம்பெயர்வது மட்டுமன்றி, பாகிஸ்தான் மற்றும் இந்தியாவிற்கும் புலம்பெயர்கின்றனர்.

மன்னாரில் தற்போது சுமார் 3000 அதிகமான ஃபிளமிங்கோக்கள் அவதானிக்க கிடைத்து, ஆனால் பல ஆண்டுகளாக எண்ணிக்கையில் தெளிவான ஏற்ற இறக்கத்தை காணக்கூடியதாக உள்ளது. ‘2012 இல், 12,000 பிளமிங்கோக்கள் இருந்தன, ஆனால் அது 1,500 ஆகவும், பின்னர் 7,000 ஆகவும் குறைந்தது, பின்னர் சென்ற வருடம் 3000 தொடக்கம் 5000 வறையும். ஆண்டுகளாக, இப்போது அது 3,000 பிளமிங்கோக்களாக உள்ளது,’

அந்த வகையில் இந்த ஃபிளமிங்கோக் பறவைகளை காண அதிமான வெளிநாட்வர்கள் வந்துள்ளனர். என மூதூரை சேர்ந்த புகைப் படக் கலைஞர் ரசீம் தெரிவித்துள்ளார். புகைப் படக் கலைத் துறையில் இவ்வாறான புகைப்படங்களை அவரால் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# மாணவியை துஸ்பிரயோகம் செய்த ஆசிரியருக்கும், சாரதிக்கும் சிறை

கொட்டக்கலை, வலப்பனை பிரதேசங்களில் பாடசாலை மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய ஆசிரியர், ஓட்டோச் சாரதி ஆகிய இருவருக்கும் முறையே 17 வருடங்கள் மற்றும் 10 வருடங்கள் கடூழிய சிறை தண்டனை விதித்து நுவரெலியா மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்த தீர்ப்பை நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி விராஜ் வீரசூரிய வழங்கினார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

பாடசாலை மாணவி ஒருவரை மூன்று முறை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் எனச் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, கொட்டக்கலை பகுதியை சேர்ந்த 43 வயது பாடசாலை ஆசிரியருக்கு எதிராக நுவரெலியா மேல் நீதிமன்றில் கடந்த 2019 ஆம் ஆண்டு வழக்கு தொடரப்பட்டிருந்தது.

கடந்த ஐந்து வருடங்களாக விசாரணை செய்யப்பட்டு வந்த நிலையில், ஆசிரியரின் வழக்கில் நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில், ஆசிரியர் குற்றவாளியாக இனங்காணப்பட்டதன் பின்னரே, 17 வருட கடூழிய சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த ஆசிரியர் மீது சுமத்தப்பட்டிருந்த மூன்று குற்றச்சாட்டுகளில் முதல் குற்றச்சாட்டில் இவருக்கு மேல் நீதிமன்றம் விடுதலை வழங்கியது. அதை தொடர்ந்து, ஆசிரியர் மீது மேலும் இரண்டு பாலியல் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு, அவ்விரு குற்றச்சாட்டுக்களிலேயே ஆசிரியருக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

17 வருட சிறை தண்டனை வழங்கி தீர்ப்பளித்த நீதிவான் விராஜ் வீரசூரிய, பாதிக்கப்பட்ட மாணவிக்கு 5 லட்சம் ரூபா அபராத தொகை வழங்க வேண்டும் எனவும், தண்டனை பணமாக 25 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் வழங்காவிட்டால் மேலும் 3 வருடங்கள் மற்றும் ஆறு மாத சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

மேலும், வலப்பனை பகுதியை சேர்ந்த ஓட்டோ சாரதிக்கு 10 வருட கடூழிய சிறை தண்டனை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தனது உறவினரான பாடசாலை மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றத்தில் குற்றவாளியாக இனங்காணப்பட்டே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவருக்கு எதிராக நுவரெலியா மேல் நீதிமன்றத்தில் 2013ஆம் ஆண்டு முதல் தொடரப்பட்ட வழக்கில், இவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டார்.

இவருக்கு சிறை தண்டனை வழங்கிய நீதிபதி, பாதிக்கப்பட்ட மாணவிக்கு 07 லட்சம் ரூபா நஷ்ட ஈட்டுத் தொகையினை வழங்க வேண்டும் எனவும் தண்டனை பணமாக நீதிமன்றத்துக்கு 25 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் எனவும் அதனை செலுத்தாத பச்சத்தில் மேலும் 06 மாதங்கள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# மேலும் 3 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு ஆட்டுப்பட்டி தெரு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு சந்தேகநபர்களுக்கு பார்வையாளர் ஒருவர் ‘விசம்’ கொடுத்த சம்பவத்திற்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் மூன்று சந்தேகநபர்களை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 22, 24 மற்றும் 26 வயதுடையவர்கள் எனவும், அவர்கள் கொட்டாஞ்சேனை, ஒருகொடவத்தை மற்றும் கொழும்பு 13 பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள பிரபல குற்றவாளி ஒருவரின் உத்தரவுக்கமைய இந்த குற்றச்செயல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

ஜனவரி 24 ஆம் திகதி கொழும்பு, ஜிந்துபிட்டி பகுதியில் ஒருவரை சுட்டுக் கொன்ற சம்பவம் தொடர்பில், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவருக்கு விஷம் கலந்த பால் கொடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் நிலையத்தில் உள்ள சிறைக்குள் எடுத்துச் செல்லப்பட்ட பால் பக்கற்றுகளில் சயனைட் விஷம் கலந்திருந்தமை கண்டறியப்பட்டது. அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், சந்தேக நபர், பால் பக்கற்றுகளை கொள்வனவு செய்வது தொடர்பான சிசிடிவி காட்சிகளும் சிக்கியுள்ளன.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு, அடைத்து வைக்கப்பட்டிருந்த இருவரிடமும் பால் பக்கற்றை வழங்கியதையடுத்து, அவற்றை குடித்த இருவரும் மயங்கிவிட்டனர். ஆபத்தான நிலையில்,கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், சம்பவம் இடம்பெற்ற வேளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேயிலைப் பொதிகள் திருட்டு பொலிஸ் காவலர் மறியலில்

இரு தேயிலைப் பொதிகளைத் திருடினார் என்கிற குற்றச்சாட்டின் கீழ் பொலிஸ் காவலர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வெரஹெர பிரதேசத்தில் உள்ள பல்பொருள் விற்பனை நிலையமொன்றில் இருந்து அவர் திருடினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் மோதரை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் காவலர். பெப்ரவரி 14 அன்று மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வெரஹெர அலுவலகத்திற்கு சென்ற அவர், தனது சாரதி உரிமத்தை புதுப்பித்த பின்னர், அலுவலகத்திற்கு அருகில் இருந்த பல்பொருள் விற்பனை நிலையமொன்றிற்குள் சென்றுள்ளார்.

அந்தப் பல்பொருள் விற்பனை நிலையத்தில் இருந்து இரு தேயிலை பொதிகளை அவர் திருடியபோது ஊழியர்களால் பிடிக்கப்பட்டார். பொலிஸ் சீருடையில் இருந்த இவரை சுற்றிவளைத்து பிடித்த ஊழியர்கள் பொரலஸ்கமுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

சந்தேகநபர் திருடினார் என்று கூறப்படும் இரு தேயிலை பொதிகளினதும் பெறுமதி 2,240 ரூபாய் என்று விற்பனை நிலையத்தினரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர் நுகேகொடை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவரை பெப்ரவரி 20 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபர் ஒழுக்கமற்ற முறையில் செயற்பட்டார் என்பதால் அவரைப் பணி இடைநிறுத்தம் செய்ய கொழும்பு வடக்கு பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# 11 பௌத்த வழிபாட்டிடங்கள் புனித பூமிகளாக அறிவிப்பு

11 பௌத்த வழிபாட்டுத் தலங்கள் புனித பூமியாக பெயரிடப்பட்டுள்ளன. தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் அரச வர்த்தமானியின் ஊடாக இதற்கான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அந்தப் பகுதிகளை புனித பூமியாக பெயரிடுவதற்கான சன்னஸ் பத்திரங்களை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

அனுராதபுரம் ஹொரவ்பொத்தான பிரதேச செயலக பிரிவின் அம்பகஸ்வெவ புராதன விகாரை, புத்தளம் தங்கொட்டுவ பிரதேச செயலக பிரிவின் பொதுவடன புராதன விகாரை, அம்பாறை பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மு/ஹுது மகா விகாரை, கம்பஹா மாவட்டத்தின் தொம்பே பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான மெத்தேகம விகாரை, ஹம்பாந்தோட்டை உத்தகந்தர விகாரை, திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலகத்தின் ஸ்ரீ சத்தர்ம யுக்திக ஆசிரமம், குருணாகல் நாரம்மல பிரதேச செயலகத்தின் தம்பதெனிய விஜய சுந்தராராம விகாரை, குச்சவெளி பிரதேச செயலகத்தின் சாந்தி விகாரை, குருணாகல் குளியா பிட்டிய மேற்கு பிரதேச செயலகத்தின் ஸ்ரீ சுதர்மாராம புராதன விகாரை, கம்பஹா சித்த கபலே மல் சூனியம் தேவாலய, குச்சவெளி பிரதேச செயலகத்தின் யான் ஓயா விகாரை, சாகர புர சுமுதுகிரி வன ஆசிரமம் ஆகிய இடங்களே புனித பூமிகளாக பெயரிடப்பட்டிருக்கின்றன.

அதற்கமைய தற்போது வரையில் நாட்டின் 142 வழிபாட்டுத் தலங்கள் புனித பூமிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்போது புத்த சாசனத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசமைப்புக்கு அமைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அர்பணிப்புடன் செயற்படுவார் என ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார். ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் ஆளும் தரப்பு புத்த சாசனத்தின் மேம்பாட்டிற்காக முன்னெடுத்துவரும் முயற்சிகள் குறித்து தெளிவூட்டிய ஜனாதிபதியின் செயலாளர், தேரவாத பௌத்த மத்தியஸ்தானமான மகா விகாரையின் ஆய்வுப் பணிகளை ஆரம்பிக்கவும், மகா விகாரை பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்கவும், கண்டி சர்வதேச பௌத்த அருங்காட்சியகத்தை நிர்மாணிப்பதற்கு அவசியமான திட்டங்களை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

புனித பூமி சன்னஸ் பத்திரங்களை வழங்குவதற்கு முன்னதாக இந்நிகழ்விற்கு வருகை தந்திருந்த மகா சங்கத்தினரால் ஜனாதிபதி செயலகத்தில் புண்ணியகர்ம பூஜைகளையும் நிகழ்த்தினர்.

# சீன மரதன் ஓட்டம் முதல் தடவையாக இலங்கையில்

இலங்கையில் முதல் முறையாக மாபெரும் சீன மரதன் ஓட்டம் மே மாதம் நடத்தப்படவுள்ளது.

அதில் 'நி ஹாவ் சோங் குவோ' (ஹே உயழ ஹுறழபெ புரழ) என்ற திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வருகை தரும் 2000 தொடக்கம் 3000க்கும் மேற்பட்ட சீன விளையாட்டு வீரர்கள் இந்த மரதன் ஓட்டத்தில் பங்குபற்றவுள்ளார்கள்.

இதனைச் சுற்றுலா மற்றும் விடுதி முகாமைத்துவ நிறுவனத்தின் தலைவர் ஷிரந்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சீனாவின் சோங்கிங் நகரத்திற்குச் சென்றிருந்த மேற்கொண்ட ஷிரந்த பீரிஸ் அங்கு இரண்டு வருட காலப்பகுதிக்குள் அதிகளவிலான சீன சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பதற்கான 'நி ஹாவ் சோங் குவோ திட்டத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

அதன்படி, இவ்வருடம் மே 1 முதல் 3 வரை மரதன் ஓட்டத்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து, உனவட்டுன கடற்கரைப் பகுதியில் கடல் உணவு திருவிழாவும் நடத்தப்பட உள்ளது.

குறித்த கடல் உணவு திருவிழாவை வருடாந்தம் நடத்த திட்டமிட்டுள்ளதாக இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் தலைவர் சாலக கஜபாகு தெரிவித்துள்ளார்.

இலங்கை 'நி ஹாவ் சோங் குவோ திட்டத்தின் கீழ் அடுத்த இரண்டு வருடங்களில் 10 இலட்சம் சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதோடு, 225 மில்லியன் ரூபாய் வருமானத்தையும் ஈட்ட முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# யானை - மனித மோதலைத் தடுக்க செங்கலடியில் பற்றைகள் அழிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் யானை - மனித மோதலைத் தடுப்பதற்கான வேலைத் திட்டங்கள் மட்டக்களப்பில் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் ஊடாகத் தொடங்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்ட பணியாக, யானைகளினால் அதிகளவில் பாதிக்கப்பட்ட பகுதியான செங்கலடி பிரதேச செயலகப் பிரிவுக்குப்பட்ட கோப்வெட்டுவான் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் காட்டு யானைகள் மறைந்திருக்கும் பற்றைக்காடுகளை அழிக்கும் நடவடிக்கைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன.

ஜே.சி.பி. இயந்திரத்தின் மூலம் பற்றைகள் அழிக்கப்பட்டு வருகின்றன. செங்கலடி பிரதேச சபையுடன் இணைந்து மாவட்ட வன உயிரிகள் திணைக்களம் இந்தப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறது.

செங்கலடி பிரதேச சபையின் செயலாளர் எஸ்.பற்குணம் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த நடவடிக்கையில் மட்டக்களப்பு மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள பணிப்பாளர் கே. சுரேஷ்குமார், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பிரதேச சபை ஊழியர்கள் பலரும் பங்கெடுத்துள்ளனர்.

# தேரர் படுகொலைக்கு உதவி என்ற குற்றச்சாட்டில் மற்றொருவர் கைது

கம்பஹா மல்வத்துஹிரிபிட்டிய பகுதியிலுள்ள உள்ள விகாரை ஒன்றில் தேரர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு உடந்தையாக இருந்த மற்றுமொரு சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மல்வானையில் வியாழக்கிழமை மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டார்.

இவர் அரலகங்வில பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய நபராவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் கைது செய்யப்பட்டபோது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு மற்றும் 10 கிராமுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருடன் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஜனவரி 23 அதிகாலையில் கம்பஹா மல்வத்துஹிரிபிட்டிய பகுதியில் உள்ள விகாரைக்கு காரில் வந்த நான்கு பேர் கொண்ட குழுவினர் அங்கிருந்த தேரர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர்.

இந்த நிலையில், துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த 45 வயதான கலபாலுவாவே தம்மரதன தேரர் கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் ஐந்து சந்தேக நபர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை குற்றவாளிகள் பயன்படுத்தியதாக கூறப்படும் டி-56 துப்பாக்கி நான்காவது சந்தேக நபரிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இதனை தவிர, கைக்குண்டு, கைத்துப்பாக்கி, 3 மகசீன்கள், 15 கிராம் ஹெரோயின், 19 தோட்டாக்கள், போலி பதிவுத் தகடு பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிள், துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட காரின் ரிமோட் சுவிச் மற்றும் கைத்தொலைபேசி என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

# கொள்ளைச் சந்தேகநபர்கள் இருவர் கிரான்ட்பாஸில் கைது

பல வீடுகளில் கொள்ளையிட்ட சம்பவங்கள் தொடர்பில் இரு சந்தேகநபர்களை வியாழக்கிழமை (15) கிராண்ட்பாஸ் பொலிஸார் கைது செய்துள்ளனர். கடந்த 13ஆம் திகதி கிரிபத்கொட பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிரிபத்கொடை, பேலியகொடை, கடவத்தை, கிருலப்பனை, பொரலஸ்கமுவ மற்றும் வத்தளை ஆகிய பிரதேசங்களில் இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நிறைவேற்று அதிகார முறை நீக்கம் சரியான நடவடிக்கைதான் - மகிந்த

நிறைவேற்று அதிகாரமுறையை நீக்குவது சரியான நடவடிக்கை என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தான் ஏற்கனவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை அனுபவித்துவிட்டார் என்றும் சிரித்தபடியே தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரசியல் நிலைமை எவ்வாறு உள்ளது என்ற செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு நாட்டின் அரசியல் நிலைசிறப்பானதாக உள்ளது நிறைவேற்று அதிகார முறையை நீக்குவது நல்லது என மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

முழுநாடும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை நீக்கவேண்டும் என வேண்டுகோள் விடுப்பதால் அதனை நீக்கவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலை பிற்போட முயல்வது எதிர்கட்சியினருக்கான பொறியாக அமையலாம், எங்களிற்கு ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க குறித்து நன்கு தெரியும் எனவும் மகிந்தராஜபக்ச தெரிவித்தார்.

எந்தேர்தல் என்றாலும் எங்கள் வேட்பாளர்கள் வெற்றிபெறுவார்கள் சரியான தருணத்தில் அவர்கள் மேடைக்கு வருவார்கள் அதுவரை பொறுத்திருங்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜேவிபி தலைவரின் இந்திய விஜயம் குறித்து கருத்து தெரிவித்துள்ள மகிந்த ராஜபக்ச இந்தியா போன்ற நாடுகளுடன் உறவை ஏற்படுத்திக்கொள்ளவேண்டியதன் அவசியத்தை ஜேவிபி இறுதியாக உணரதலைப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது என தெரிவித்துள்ளார்.

# வீதியில் சென்றவர் மீது மரம் வீழ்ந்து அவர் சாவு

வெட்டப்பட்ட மரம் ஒன்று வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்தவர் மீது விழுந்ததில் அவர் உயிரிழந்தார் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் ஹங்குராங்கெத்த கட்டில்லாவல பிரதேசத்தில் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது. இஸ்கொலவத்த அகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார் என்று தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மரத்தை வெட்டிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இஸ்ரேலிய அமைச்சருடன் ஜனாதிபதி நேற்றுச் சந்திப்பு

*ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் இஸ்ரேலின் போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்பு அமைச்சர் பிரிகேடியர் ஜெனரல் மிரி ரெகேவ் (ஆசைi சுநபநஎ) ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.*

*ஹமாஸ் போராளிகளால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ள இஸ்ரேலியர்களை மீட்பதற்கு இலங்கை தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்கும் எனவும் காஸா பகுதியில் இடம்பெறும் மோதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் தெரிவித்தார்.*

*இஸ்ரேல் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி பலஸ்தீன அரசை அமைப்பதற்கு இலங்கை ஆதரவளிப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது தெரிவித்தார்.*

*இந்நிகழ்வில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் சர்வதேச அலுவல்கள் பணிப்பாளர் தினுக் கொழும்பகே ஆகியோரும் கலந்துகொண்டனர்.*

# மயிலத்தமடு தமிழர் மேய்ச்சல் நிலத்தை களைநாசினி விசிறி நாசமாக்குகிறார்கள்

மட்டக்களப்பு - மாதவனை, மயிலத்தமடுவில் உள்ள தமது மேச்சல்தரை- 'பரக்குவாட்' போன்ற களைநாசினிகளை விசிறியும், தீ வைத்தும் அழிக்கப்பட்டு வருவதாகத் தமிழ் கால்நடைப் பண்ணையாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்தப் பகுதியில் மேய்ச்சல் தரையின் ஒரு பகுதியை ஆக்கிரமித்து சிங்களவர்கள் சட்டவிரோதமாகக் குடியேறியுள்ளனர். அவர்கள் மேய்ச்சல் நிலங்களைப் பிடித்து விவசாயமும் செய்து வருவதால் தமது கால்நடைகள் மேய்வதற்கு இடமின்றி இருப்பதாகவும், மேயச் செல்லும் கால்நடைகள் கொல்லப்படும் காயப்படுத்தப்படும் வருவதாகவும் தமிழ் கால்நடைப் பண்ணையாளர்கள் ஏற்கனவே குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

தமது பிரச்சினைக்குத் தீர்வு தருமாறு கோரி அவர்கள் தொடர் போராட்டங்களிலும் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையிலேயே மழைகாலத்தை அடுத்து நன்றாக வளர்ந்திருந்த புற்களை அழிப்பதற்காக 'பரக்குவாட்' போன்ற களைநாசினி மேய்ச்சல் தரை மீது விசிறப்பட்டு வருவதாகவும் களைநாசினியால் புற்கள் காய்ந்ததும் அவற்றுக்குத் தீ வைத்துக் கொளுத்தப்படுவதாகவும் தமிழ் பண்ணையாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சட்டவிரோதமாக அந்தப் பகுதியில் குடியேறியிருப்பவர்களே இதனைச் செய்கின்றனர் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். பெப்ரவரி 14 தொடக்கம் இவ்வாறு மேய்ச்சல் நிலம் கொளுத்தப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இந்த இடங்களையும் ஆக்கிரமிக்கும் நோக்கத்துடனேயே மேய்ச்சல் தரையில் புற்கள் அழிக்கப்படுகின்றன என்றும் அவர்கள் சந்தேகிக்கின்றனர்.

இப்படி மேய்ச்சல் தரை அழிக்கப்படுவதற்கு எதிராக வனவளத் திணைக்களமோ வன உயிரிகள் திணைக்களமோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தமிழ்ப் பண்ணையாளர்கள் குற்றஞ்சாட்டினர்.

'பரக்குவாட்' களைநாசினி விசிறிய புற்களைத் தமது கால்நடைகள் மேய்வதால் மாடுகள் சில சமயங்களில் நோய்வாய்ப்பட்டுள்ளதாகவும் பண்ணையாளர்கள் கூறுகின்றனர்.

"எமது வாழ்வாதாரம் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது, இந்த அநீதிகளைக் கேட்பதற்கும் எவருமில்லை, பார்ப்பதற்கும் எவருமில்லை" எனத் தமிழ்ப் பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# பொருளாதார வீழ்ச்சிக்கு மத்திய வங்கியே காரணம்

## நீதி அமைச்சர் சொல்லும் கருத்து இது

நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைய மத்திய வங்கியே பிரதான காரணமாகும். அஜித் நிவாட் கப்ரால் அளுநராக இருந்த காலத்தில் இருந்து நாட்டின் அன்னிய செலாவனி துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வந்தது. அதனால் வெளிநாட்டுகளில் இருப்பவர்களுக்கு மத்திய வங்கியின் நடவடிக்கைகளில் நம்பிக்கை இல்லாமல் போனது என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ் தெரிவித்தார்.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சில் வியாழக்கிழமை (15) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அரச வங்கிகள் சாதாரண மக்கள் தொடர்பில் கண்டுகொள்வதில்லை. அதனால்தான் அந் மக்கள் கறுப்பு வியாபாரிகளை நாடி, தங்களின் வியாபார நடவடிக்கைகளுக்கு பாரிய வட்டித் தொகைக்கு கடன் பெறுகின்றனர். இதனால் சாராதண வியாபாரிகள் விவசாயிகள் தங்களின் தொழிலில் நட்டம் ஏற்படும்போது அவர்கள் அந்த தொழிலை விட்டுவிடும் நிலைக்கு செல்கிறனர். அதனால்தான் இன்று நாட்டில் விவசாயம் செய்பவர்களின் வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதனால் இது தொடர்பாக மத்திய வங்கி கொள்கை ரீதியில் இது தொடர்பாக தீர்மானம் மேற்கொண்டு அதனை சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் அது தொடர்பான சட்டங்களை அனுமதித்துக்கொள்ள எமக்கு நடவடிக்கை எடுக்க முடியும். மத்திய வங்கிக்கு நிதி தொடர்பான அதிகாரங்களை வழங்கும் புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அதனால் இன்னும் தாமதிக்காமல் மத்திய வங்கி இதுதொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் நாடு வீழ்ச்சியடைய பிரதான காரணம் மத்திய வங்கியாகும். இதற்கு 90 வீதம் மத்திய வங்கியின் நடவடிக்கையே காரணமாகும். 10 வீதம் மற்ற விடயங்களாகும். 2006இல் மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்பட்டது முதல் எமது வெளிநாட்டு செலாவனி முற்றாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வந்தது. அதனால் வெளிநாடுகளில் இருக்கும் எமது தொழிலாளர்கள் பாரியளவில் வெளிநாடுகளில் வியாபாரம் செய்து, அங்கு சேமித்து வைத்துக்கொண்டார்கள். நாட்டுக்கு பணம் அனுப்பவில்லை.

அதனால் எந்தவொரு நாட்டும் வெளிநாட்டு செலாவனியை நிர்வகித்துக்கொள்ள தவறினால் அந்த நாடு தோலியடையும். அதுதான் எமக்கும் ஏற்பட்டது. எமது அவெளிநாட்டு செலாவனியை முகாமைத்துவம் செய்ய மத்திய வங்கிக்கு முடியாமல் போனது. சிறிமா அம்மையாரின் காலத்தில் வெளிநாட்டு செலாவனி மோசடி ஆணைக்குழு அமைத்து விசாரணை மேற்கொண்டு, அதில் குற்றவாளியாக்கப்பட்ட அனைவரையும் சிறையிலடைத்தார். சிலர் சிறையிலேயே மரணித்தார்கள்.

அதனால் நாட்டின் நிதி முகாமைத்துவம் தொடர்பாக மத்திய வங்கி சுயாதீன நிறுவனமாக செயற்படும் வகையில் புதிய சட்டம் கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதற்கு முன்னர் மத்திய வங்கி அதுதொடர்பான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். முறையான நிதி முகாமைத்துவம் இல்லாமையே கறுப்பு சந்தை நிதி நிறுவனங்கள் அதிகரிக்க காரணமாகும் என்றார்.

# பொன் சேகாவிடம் இருந்து கட்சிப் பதவி பறிக்கப்படும்

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியிலிருந்து முன்னாள் இராணுவதளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத்பொன்சேகா நீக்கப்படவுள்ளார் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சமீபத்தில் கட்சி குறித்து அவர் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துக்களை தொடர்ந்தே சரத்பொன்சேகா கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து நீக்கப்படவுள்ளார்.

சரத்பொன்சேகாவை வெளியேறறுவது மிகவிரைவில் இடம்பெறும் எனத் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி வட்டாரங்கள் அவரை கட்சியிலிருந்து நீக்குவது என்பது நீதிமன்ற விவகாரமாக மாறாலாம், ஆனால் கட்சியின் தலைவருக்கு அதற்கான அதிகாரங்கள் உள்ளன எனவும் தெரிவித்தன. கட்சி தலைமை எச்சரிக்கை விடுத்துள்ள போதிலும் சரதபொன்சேகா தொடர்ந்தும் ஐக்கியமக்கள் சக்தியை விமர்சித்துவருகின்றார், சமீபத்தில் அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் நேரில் சந்தித்துக் கலந்துரையாடி இருந்தார்.

# அச்சுவேலி வைத்தியசாலையில் போதையில் சிலர் அட்டகாசம்

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் உட்புகுந்த இனம் தெரியாத சிலர் அட்டகாசத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலைக்கு வியாழக்கிழமை மாலை மது போதையில் வந்த சிலர் கடமையிலிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரைப் தலையில் பலமாகத் தாக்கினர் என்று பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு உத்தியோகத்தரின் அலுவலக ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தியுள்ளனர். இதனை தடுக்க வந்தவர்களையும் தகாத வார்த்தைகளால் கடுமையாக மிரட்டினர்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிசாருக்கு வைத்தியசாலை நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்ட நிலையில், பொலிசார் வாக்குமூலங்களைப் பதிவு செய்து, விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பதிய பொலிஸ் காவலரண் நேற்று திறப்பு

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு அருகில் புதிய பொலிஸ் காவல் அரண் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பணிப்புரைக்கு அமைய பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் வியா ழக்கிழமைஇந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், "நாட்டின் வைத்தியசாலை கட்டமைப்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலை பாரிய இடம் வகிக்கிறது. நாடளாவிய ரீதியில் பல்வேறு இடங்களிலிருந்தும் நோயாளர்கள் சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதற்காக இங்கு வருகை தருகின்றனர். எனவே நாம் அவர்களுக்கு பாதுகாப்பளிக்க வேண்டும்.மேலும் தேசிய வைத்தியசாலையின் அண்மித்த பகுதியில் விசேட போக்குவரத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன" என்றார்.

## மதரஸாவில் சிறுவர் உயிரிழந்த சம்பவத்தில்

# சிசிடிவி காணொலிகளை அழித்தோரை இனங்கண்டு கைதுசெய்யுமாறு உத்தரவு

(பாறுக் ஷிஹான்)

மௌலவியின் வேண்டுகோளிற்கமைய சிசிடிவி காணொளிகளை அழித்தவர்களை இனங்கண்டு கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்துமாறு பொலிஸாருக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த வழக்கின் பிரதான சந்தேக நபரான மௌலவியை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

மேற்படி வழக்கு வியாழக்கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் பாதிக்கபட்ட தரப்பினர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி உட்பட ஏனைய தரப்பினரின் விடயங்களை ஆராய்ந்த நீதிவான் அழிக்கப்பட்ட காணொளிகளை மீளப் பெற்றுக்கொள்ள மொரட்டுவை கணனி பிரிவிற்கு வன்பொருளை அனுப்பி வைக்குமாறு கட்டளை பிறப்பித்தார்.அத்துடன் நீண்ட சமரப்பணத்தின் பின்னர் மத்ரஸா பாடசாலை மாணவனின் மர்ம உயிரிழப்பு தொடர்பில் கைதான மௌலவியை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 29 திகதி வரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் உத்தரவிட்டார்.

மேலும் அரச பகுப்பாய்வு திணைக்களத்திற்கு சம்பவ தினம் இடம்பெற்ற மாணவனது மரணம் தொடர்பில் பதிவு செய்யப்பட்ட சிசிடிவி வன்பொருளில் சேமிக்கப்பட்டிருந்த காணொளிகள் மௌலவியின் உத்தரவின் பேரில் அழிக்கப்பட்ட நிலையில் அதனை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நீதிவானின் உத்தரவிற்கமைய கடந்த நீதிமன்ற தவணைகளில் அரச இரசாயண பகுப்பாய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில் அங்கு அதற்கான தொழிநுட்பம் இன்மையால் வன்பொருள் மீள பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அரச பகுப்பாய்வு திணைக்களத்தில் இரந்து மீள பெறப்பட்ட சிசிடிவி வன்பொருளில் அழிந்த காணொளிகளை மீளப் பெற்றுக்கொள்ள மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் உள்ள கணனி தொழிநுட்ப பிரிவிற்கு அனுப்பி அழிக்கப்பட்ட காணொளிகளை பெற வேண்டும் என மரணமடைந்த மாணவன் சார்பாக ஆஜரான சட்டத்தரணி மன்றிற்கு விண்ணப்பம் செய்தார். இதனை அடுத்து நீதிவான் குறித்த விடயத்தை உடனடியாக மேற்கொள்ள சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

அத்துடன் சம்பவ தினம் பதிவு செய்யப்பட்ட சிசிடிவி காணொளிகளை வன்பொருளில் அழித்த சிசிடிவி தொழிநுட்பவியலாளரை ஏன் பொலிஸார் கைது செய்யவில்லை என்ற வாதப்பிரதிவாதம் மன்றில் சட்டத்தரணியால் ஆட்சேபனை முறையில் முன்வைக்கப்பட்டது. இதன்போது பொலிஸார் குறித்த சிசிடிவி தொழிநுட்பவியலாளரை அரச சாட்சியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மன்றில் தெரிவித்தனர்.எனினும் நீதிவான் குறித்த வழக்கின் மேலதிக விசாரணைக்காக குறித்த சிசிடிவி காணொளிகளை அழித்தவர்களை இனங்கண்டு கைது கைது செய்யுமாறு உத்தரவிட்டார்.இந்த வழக்கில் மனுதாரர் சார்பாக சட்டத்தரணி ஷஃபி எச். இஸ்மாயில் ஆஜராகி மன்றில் இவ்விடயம் தொடர்பில் நீண்ட சமர்ப்பணம் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# மட்டக்களப்பிற்கு அதாவுல்லா வரக்கூடாது எனச் சொல்லும் சாணக்கியன் முட்டாள்

## சீறுகிறது கிழக்கின் கேடயம்



கிழக்கு மாகாணத்தை பற்றி எதுவுமே தெரியாத இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சகோதரர் செந்தில் தொண்டமான் கிழக்கை ஆளும்போது இம்மாகாணத்தில் பிறந்து அதன் சுதந்திரமான சுவாசத்திற்கு பாடுபட்ட ஒருத்தரை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்துகொள்ள என்ன தகுதி உள்ளது என்று கேட்க இராசமாணிக்கம் சாணக்கியன் யார்? சாணக்கியனை விடவும் ஏன் இலங்கையில் காணப்படும் முஸ்லிம் தலைவர்களை விடவும் கிழக்கு மாகாணத்தை பற்றி அதிகம் தெரிந்தவர் தேசிய காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா அவர்களே. அவரை பார்த்து மட்டக்களப்பினைப் பற்றி எதுவும் அவருக்கு தெரியாது என்று சாணக்கியன் சொன்னால் அவர் ஒரு முட்டாள் என்று நாங்கள் கூறுவோம் என கிழக்கின் கேடயம் அமைப்பின் சார்பில் அவ்வமைப்பின் தலைவர் எஸ்.எம். சபீஸ் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவராக தேசிய காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கு சமுகமளித்துள்ளார். இந்த கூட்டத்தின் பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் அம்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இராசமாணிக்கம் சாணக்கியன் மட்டக்களப்பு மாவட்டத்தை பற்றி அறியாத அதாஉல்லா எவ்வாறு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கு வர முடியும் என கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கு பதிலளிக்கும் வகையில் கிழக்கின் கேடயம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் எஸ் எம் சபீஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

தமிழ் மக்களின் தலைமைகள் என்று கூறிக்கொள்ளும் இவர்கள் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகளே. அவர்கள் எப்போதும் தங்களது மக்கள் மாத்திரமே வாழ வேண்டும் என எண்ணுபவர்களாக மட்டுமே இருக்கிறார்கள். ஆனால் நாங்கள் எல்லா மக்களும் நிம்மதியாகவும், ஒற்றுமையாகவும் சந்தோசமாகவும் வாழ வேண்டும் என்று எண்ணுபவர்கள். முஸ்லிம்களின் அபிமானி போல வேடமிட்டு திருகோணமலை சண்முகா இந்து கல்லூரி விடயத்தில் இரண்டு நாள்களுக்கு பின்னர் எனக்கு எதுவுமே தெரியாது என நடித்த கோழை தான் இந்த சாணக்கியன். இவர் வடக்கு-கிழக்கு இணைய வேண்டும் என்றும் அதில் முஸ்லிம்களை அடக்கி ஆள வேண்டும் என்று விரும்புவரும் கூட.

இப்படிப்பட்ட எண்ணம் கொண்ட தமிழ் மக்கள் பிரதிநிதிகளின் உருட்டுக்களை நாங்கள் நன்றாக அறிந்தவர்களாக இருக்கிறோம். அதனால்தான் வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பில் இந்தியாவுக்கு சிறுபான்மை கட்சிகள் இணைத்து அனுப்ப இருந்த கடிதத்தை நாங்கள் முன்னின்று தடுத்து நிறுத்தினோம். நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மட்டக்களப்பு மாவட்டத்தை பற்றி அறியாத அதாஉல்லா எவ்வாறு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கு வரமுடியும் என்ற கேள்வியை வாபஸ் பெற்று பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.02.2024இல் வெளியிடப்பெற்றது.